# ஆண்டறிக்கை

# 2016

தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# தேசிய கல்வி நிறுவகம்
# முன்னேற்ற அறிக்கை – 2016

## 1.0 அறிமுகம்

### 1.1 நிறுவகத்தின் நோக்கங்கள்

1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்படி நிறுவப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவகம் கீழ்வரும் நோக்கங்களை எய்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

(அ) இலங்கையில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள் என்பன தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) கல்வியின் பல்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் கல்விக்கு ஏற்பாடு செய்தல், அதனை மேம்படுத்தல்.

(இ) கல்வி முறைமையின் நிறைவேற்றுகை, இலக்குகள், அமைப்புகள், உள்ளடக்கம், முறைமையியல் என்பன உட்பட கல்வி முறைமையின் மீதும், கல்வியின் சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அம்சங்கள் மீதுமான கற்கைகளை நடாத்துதல், மேம்படுத்துதல்.

(ஈ) கல்விசார் நோக்கங்களுக்காகத் தொழினுட்பவியலின் இசைவாக்கம் உட்பட, கல்வி முறைமையில் புத்தாக்கப் பயில்வுகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல்.

(உ) கல்வி முறைமையிலுள்ள ஆளணியினரின் உயர் தொழில் தகைமையையும் முகாமைத்துவத் தகைமையையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(ஊ) கல்வித் துறையின் நிபுணத்துவ சேவைகளை அரசாங்கத்துக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் கிடைக்கச் செய்தல்.

(எ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல்.

(ஏ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைத்துச் செயற்படல்.

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை முறைமையினது கலைத்திட்ட அபிவிருத்தி, கல்வித் துறையில் ஈடுபட்டவர்களினது வாண்மை விருத்தி, கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்தல் முதலியனவற்றிற்குப் பொறுப்பாக விருக்க உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன்படி உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் கேள்விகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் தலைமைத்துவத்திற்கான வாண்மை தேர்ச்சிகளை பாடசாலை முறைமைக்கு வழங்கல்; விஞ்ஞான ரீதியிலான தகவல்களை வழங்கக்கூடிய ஆய்வுகளுக்காக வழிகாட்டல் மற்றும் கல்வி

அபிவிருத்திக்கான கொள்கைகளை உருவாக்க வசதியளிக்கின்றது. அதன்படி, தேசிய கல்வி நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்துவதற்காக, அதன் பொறுப்புகள் ஐந்து பீடங்களிடமும் ஒரு பிரிவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போதுள்ள கலைத்திட்டக் கொள்கைகளுக்கு அமைவாக கலைத்திட்ட மறுசீரமைப்பானது 8 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும். 2006 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட கலைத்திட்டமானது 1999 ஆம் ஆண்டு பல்வேறு மாற்றங்களோடு தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டமாக 1999 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். அமுல்படுத்தப்பட்ட 8 ஆண்டுகளையுடைய கலைத்திட்டமானது,

- பாடசாலை முறைமையில் ஒவ்வொரு குழுவினரோடு தொடர்புபட்ட கலைத்திட்ட ஆய்வுகளை அமுல்படுத்தி தகவல்களை வெளிப்படுத்தல்.
- பல்வேறுபட்ட சமூகக்குழுக்களினது சார்புடைய கருத்துக்களையும் ஆலோசனை களையும் வெளிப்படுத்தல்.
- கலைத்திட்ட அமுல்படுத்தல், விருத்தி செய்தல் தொடர்பில் பல்வேறுபட்ட நாடு களினது வெற்றிகரமான அனுபவங்களை பகிர்தல்.
- ஓவ்வொரு பாடப் பரப்பிற்குள்ளும் முழுமைப்படுத்தப்பட்ட புத்தறிவினையும் கற்பித்தல் முறைமைகளையும் சேர்த்துக் கொள்ளல்.

2016 ஆம் ஆண்டிற்குரிய கலைத்திட்ட அமுல்படுத்தலும் பகுத்தாய்வும் 7 மற்றும் 11 ஆம் தரங்களுக்குரிய கலைத்திட்டத்தைப் பாடசாலைகளில் அமுல்படுத்துபவனவற்றைக் கண்காணித்தல் மற்றும் இரண்டாம் கட்டமாக 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக, 2, 8 மற்றும் 12 ஆம் தரங்களுக்குரிய ஆசிரியர் வழிகாட்டிகளை மாகாண பயிற்றுனர் களைப் பயிற்றுவிப்பதற்காகத் தயாரித்தல்; 2018 ஆம் ஆண்டில் கலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 3, 8 மற்றும் 13 தரங்களுக்குரிய பாடத்திட்டத்தைத் தயாரித்தல்.

## 1.2 நிதியிடல்

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கலைத்திட்ட நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பாடசாலை கல்வி முறைமையைப் பரிமாற்று வதற்கான அறிவு கேந்திர செயற் திட்டத்தினூடாகவும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத் தினூடாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதுள்ள நிதி வரையறைகளினால் திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி, நிறுவக ஊழியர்களின் சம்பளங்களுக்காகவும் எஞ்சிய நிலுவை தொகை நீர், மின், சுகாதார மற்றும் பாதுகாப்பு கட்டணங்களுக்காக நிறுவகத்தினால் நடாத்தப்படும் பல்வேறு பாடநெறிகளின் வருமானத்தைப் பயன்படுத்துவதனூடாகவும் நிறைவேற்றிக் கொள்ளப்படு கின்றது. எவ்வாறாயினும் நிறுவகத்தினால் விசேடமாக நடாத்தப்படும் பாடநெறிகளானவை

இலாபமீட்டுவதனை நோக்காக கொண்டவையல்ல. அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங் களானவை வேறு நிறுவகங்களினால் அதை ஒத்த பாடநெறிகளுக்கு அறவிடும் கட்ட ணத்தை விட ஒப்பீட்டளவில் குறைவானவையாகும். 2016 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகம் 189 122 000 ரூபாவை மீண்டெழும் செலவினமொன்றாக சம்பளமல்லாத தொகை யினை செலவிட்டிருந்தது. இதில் 53% தேசிய கல்வி நிறுவக வருமானங்களிலிருந்து ஈடுசெய்யப்பட்டதாகும்.

கீழ்க் காட்டப்படும் அட்டவணை 2016 ஆம் ஆண்டின் செலவினத் தகவல்களைத் தருகின்றது.

| நிதிமூலம் | நடைமுறைச் செலவினம் | | மூலதனச் செலவினம் | |
|---|---|---|---|---|
| | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | உண்மைச் செலவினம் | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | உண்மைச் செலவினம் |
| திரண்ட நிதி | 345 000 000 | 303 000 000 | 157 000 000 | 21 000 000 |
| எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வி முறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம் (TSEP) | 64 000 000 | 20 000 000 | 16 000 000 | 16 000 000 |
| அவுஸ்திரேலியா அரசநிதி (DFAT) | 40 000 000 | 84 981 156 | - | - |
| வருமானம் (தே.க.நி) | 156 431 000 | 156 431 000 | 25 000 000 | 10 840356 |
| கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ESDP) | 65 000 000 | 65 000 000 | - | - |
| யுனிசெப் (UNICEF) | 10 226 000 | 10 226 000 | - | - |
| கொரிய தேசிய யுனெஸ்கோ ஆணையகம் (UNESCO) | 4 300 000 | 4 346 706 | - | - |


## 1.3 ஆளணி

தேசிய கல்வி நிறுவகம் நிறுவகத்தை உயர்த்திச் செல்வதற்காக, புத்தூக்கம் நிறைந்த பணிப்பாளர் நாயகத்தின் கீழ் அதன் நிர்வாகம் 16 மார்ச் 2016 அன்று கொண்டு வரப்பட்டது. இந்த மாற்றத்தோடு இணைந்த வகையில் நிறுவனத்தின் மனித பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக, தேசிய மட்ட நிறுவகமொன்றாக, அதிக வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் செயற்படுவதனை உறுதி செய்வதான பல நடைமுறைகளை புதிய பணிப்பாளர் நாயகம் முன்னெடுத்துள்ளார்.

கீழ்வரும் அட்டவணை 2016 ஆரம்பத்தில் காணப்பட்ட ஆளணி நிலைமையை படம்பிடித்து காட்டுகின்றது.

| பதவி | 01-01-2016 இன்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் | 01-01-2016 இன்படி பணியில் உள்ள உத்தியோகத்தர்கள் | | | 01-01-2016 இன்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1. பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 00 | 01 | 00 |
| 2. மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 | 00 | 00 | 00 | 01 |
| 3. பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 06 | 04 | 01 | 04 | 02 |
| 4. பணிப்பாளர் | 27 | 09 | 06 | 15 | 12 |
| 5. சபைச் செயலாளர் (கல்வி) | 01 | 00 | 00 | 00 | 01 |
| 6. சிரேஷ்ட விரிவுரையாளர் / சிரேஷ்ட கல்வியியலாளர் | 72 | 34 | 17 | 51 | 21 |
| 7. விரிவுரையாளர்/ கல்வியியலாளர் | 75 | 18 | 26 | 44 | 31 |
| 8. உதவி விரிவுரையாளர் / உதவி கல்வியியலாளர் | 90 | 18 | 27 | 45 | 45 |
| 9. கல்விசாரா உத்தியோகத்தர் | 379 | 152 | 156 | 308 | 71 |
| **10.மொத்தம்** | **652** | **236** | **232** | **468** | **184** |

நிறுவகத்திற்கு பாராளுமன்ற சட்டத்தின்படி ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை மேற் கொள்வதில் தற்பொழுதுள்ள குறை ஆளணி பெரும் பிரச்சினையாகவுள்ளது. 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 652 ஆக இருக்க வேண்டிய மொத்த ஆளணியில் 188 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதற்காக கல்வி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் துறை என்பவற்றுடன் இணைந்த வகையில் பலதரப்பட்ட முயற்சிகள் எடுக்கப் பட்டிருந்தன. இதனடிப்படையில் 75 பணியணியினர்களை ஆட்சேர்த்து தற்பொழுது நிலவும் பற்றாக்குறையை நிரப்புவதற்கான அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதன்படி பொருத்தமான ஆளணியினரை உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.




## 2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு

### 2.1 2016க்கான பேரவை

தேசிய கல்வி நிறுவக சட்டப் பிரமாணங்களுக்கு ஏற்புடைய விதத்தில் பேரவை பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

- ஒழுங்கு விதிகளினால் குறித்துக் கொடுக்கப்பட்ட நியமங்களின் திட்டத்திற்கான செயற்பாடுகளுக்கமைய நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் சேவைகளுக்கான கால அளவு மற்றும் நிபந்தனைகள், நாட்கூலிகள், சம்பளம் அல்லது ஏனைய ஊதியங்களைத் தீர்மானித்தல்.
- ஒழுங்குக் கட்டுப்பாடு சம்பந்தமான விடயங்களின் விதிகளை ஆக்குதல்.
- நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் நன்மைக்கான சேமலாப நிதியத்தை ஒழுங்கு செய்தலும் அமைத்தலும் அத்துடன் அவ்வாறான நிதியங்களுக்கு அல்லது திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

தேசிய கல்வி நிறுவகச் சட்டதிட்டங்களின்படி, நிறுவகத்திற்கு நிதியைக் கையாளும் மற்றும் நிர்வாகத்தை நடத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு பேரவையில் பின்வரும் உறுப்பினர்கள் சேவையாற்றினார்கள்.

| | | |
|---|---|---|
| திரு. டப்ளியு. எம். பந்துசேன<br>(செயலாளர், கல்வியமைச்சு) | - | தலைவர்<br>(ஆகஸ்ட் 2016 வரை) |
| திரு. சுனில் ஹெட்டியாராய்ச்சி<br>(செயலாளர், கல்வியமைச்சு) | - | தலைவர்<br>(செப்ரெம்பர் 2016 இலிருந்து) |
| பேராசிரியர் குணபால நாணயக்கார<br>(பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்) | - | உறுப்பினர்<br>(14-03-2016 வரை) |
| கலாநிதி (திருமதி) ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர<br>(பணிப்பாளர் நாயகம், தே.க.நி) | - | உறுப்பினர்<br>(16-03-2016 இலிருந்து) |
| பேராசிரியர் எஸ். சந்திரசேகரம்<br>(முன்னாள் பீடாதிபதி, கல்விப்பீடம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| கலாநிதி ரி. ஏ. பியசிரி<br>(உபவேந்தர், தொழில்சார்<br>தொழில் நுட்ப பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| திரு. வை. எல். எம். நவவி<br>(சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>உயர் கல்வி அமைச்சு) | - | உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| திருமதி. கே. ஏ. எச். சி. பூபுடுசிறி<br>(உதவிப் பணிப்பாளர்,<br>தேசிய பாதீட்டுத் திணைக்களம்,<br>நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு) | - | உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| பேராசிரியர் டபிள்யு. டி. டபிள்யு. ஜயதிலக<br>(பேராசிரியர், இரசாயனத் திணைக்களம்,<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிரி<br>(சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞான பீடம்,<br>கொழும்புப் பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |

| | |
|---|---|
| பேராசிரியர் ஜயதேவ உயங்கொட<br>(கொழும்புப் பல்கலைக்கழகம்) | - உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| கலாநிதி அமல் ஹர்ஷ த சில்வா<br>(பணிப்பாளர், சுகாதாரக்கல்வி மற்றும் பகிரங்கப்படுத்தல் அலுவல்கள் திணைக்களம், கொழும்பு – 07) | - உறுப்பினர்<br>(12-07-2016 வரை) |
| பேராசிரியர் பி. எஸ். எம். குணரத்ன<br>(உதவித் தலைவர், பல்கலைக்கழகங்கள், மானியங்கள் ஆணைக்குழு) | - உறுப்பினர்<br>(13-07-2016 இலிருந்து) |
| பேராசிரியர் ஹேமமாலா ரத்வத்த<br>(பேராசிரியர், மொழிக் கற்கைகள் துறை, திறந்த பல்கலைக்கழகம், இலங்கை) | - உறுப்பினர்<br>(13-07-2016 இலிருந்து) |
| திரு. திஸ்ஸ ஹேவாவித்தான<br>(இராஜாங்க செயலாளர், கல்வி அமைச்சு) | - உறுப்பினர்<br>(12-07-2016 இலிருந்து) |
| திரு. எம். கே. பிரதீப் குமார<br>(பணிப்பாளர், தேசிய பாதீடுகள், நிதி அமைச்சு) | - உறுப்பினர்<br>(28-07-2016 இலிருந்து) |
| திரு. எஸ். எச். குமாரசிங்க<br>(ஓய்வுபெற்ற அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு – 07) | - உறுப்பினர்<br>(12-07-2016 இலிருந்து) |
| திரு. ஏ. எம். ஆர். பீ. அமரக்கோன்<br>(முன்னாள் ஆணையாளர் நாயகம் பரீட்சைகள் திணைக்களம்) | - உறுப்பினர்<br>(28-07-2016 இலிருந்து) |
| திரு. டப்ளியு. எம். அனுராத விஜேக்கோன்<br>(மேலதிகச் செயலாளர், உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு) | - உறுப்பினர்<br>(ஆகஸ்ட் - செப்ரெம்பர் வரை) |
| திருமதி. வி. டி. சி. பி. பெரேரா<br>(பணிப்பாளர், வெளியக மூலவள முகாமைத்துவ அலகு, தேசிய கல்வி நிறுவகம்) | - பேரவைச் செயலாளர் |

## 2.2 கல்விசார் அலுவல்கள் சபை 2016

பேரவையை விட கல்விசார் அலுவல்கள் சபையானது, கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஏனைய பொருத்தமான துறைகளின் நிபுணர்களைக் கொண்டுள்ளது. இது அனைத்து கல்விசார் அலுவல்கள் மற்றும் கல்விசாரா மற்றும் நிறுவனம்சார் தலைமைத் துவம், மேற்பார்வை, அத்துடன் பின்வரும் செயற்பாடுகள் / அலுவல்கள் என்பவற்றுக்கும் பொறுப்பாக உள்ளது.

- எல்லா கல்விசார் விடயங்களுக்கும் பேரவைக்கு ஆலோசனை வழங்கல்.
- பேரவையினால் முன்வைக்கப்படும் எந்த விடயத்திற்கும் கவனம் செலுத்தலும் அறிக்கையிடலும்.
- நிறுவகம் நடத்துகின்ற அல்லது நிறுவகத்தில் நடக்கின்ற கற்றல் தொடர்பான பாட நெறிகள், பயிற்சி நிகழ்ச்சி / நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் பற்றி பேரவைக்கு சிபார்சுகளும் அறிக்கையும் வழங்குதல்.
- பாடநெறிகள், பயிற்சி நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மற்றும் நிறுவகத்தால் நடாத்தப் படுகின்ற பரீட்சைகள் என்பவற்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு தேவையான சிபார்சுகளை பேரவைக்குத் தெரிவித்தல்.
- கற்றலுக்கான பாடநெறிகள் சார்ந்த ஒழுங்கு விதிகளை வரைந்தும், கற்பித்தல் நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மற்றும் நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகள் என்ப வற்றுக்கான விதிகளை வரைந்தும் அவ்வித வரைவுகளைப் பேரவைக்குச் சமர்ப்பித்தல்.
- நிறுவகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளின் பரீட்சகர்களாக நியமிப்பதற்குப் பொருத்த மான நபர்களை பேரவைக்குச் சிபார்சு செய்தல்.
- கண்காட்சிகளுக்கான விருதுகள் மற்றும் ஏனைய பரிசில்கள், புலமைப்பரிசில்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் என்பவற்றைப் பெறத் தகுதியான பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களின் பெயர்களை பேரவைக் குச் சிபார்சு செய்தல்.
- பேரவையின் அனுமதியோடு, சபை உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனையவர்களை உள்ள டக்கும் குழுக்களை நியமித்தல்.

பின்வரும் கல்விசார் நிபுணர்களை, கல்விசார் அலுவல்கள் சபை 2016 இல் கொண்டிருந்தது.

| | | |
|---|---|---|
| கலாநிதி எம். ஏ. உபாலி மாம்பிட்டிய<br>(சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத்துறை,<br>களனிப் பல்கலைக்கழகம்) | - | தலைவர்<br>(14-03-2016 இலிருந்து) |
| பேராசிரியர் குணபால நாணயக்கார<br>(பணிப்பாளர் நாயகம், தே.க.நி) | - | உறுப்பினர்<br>(14-03-2016 வரை) |

| | | |
|---|---|---|
| கலாநிதி (திருமதி) ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர<br>(பணிப்பாளர் நாயகம், தே.க.நி) | - | உறுப்பினர்<br>(16-03-2016 இலிருந்து) |
| பேராசிரியர் ஆர். அரங்கல<br>(பேராசிரியர், சிங்கள மொழித் துறை,<br>ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர் |
| திரு. எல். எம். டி. தர்மசேன<br>(ஆணையாளர், கல்வியற் கல்லூரிகள்,<br>கல்வி அமைச்சு) | - | உறுப்பினர்<br>(ஜுன் 2016 வரை) |
| திரு. திஸ்ஸ ஹேவாவித்தான<br>(கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம்,<br>கல்வி அமைச்சு) | - | உறுப்பினர்<br>(ஜுன் 2016 வரை) |
| திரு. கே. எம். எச். பண்டார<br>(பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்வி,<br>கல்வி அமைச்சு) | - | உறுப்பினர்<br>(ஜுலை 2016 இலிருந்து) |
| திரு. ஈ. கே. கனிகிகம<br>(சமூகவியல் துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர் |
| கலாநிதி ஆர். யூ. ஹல்வத்துற<br>(குடிசார் பொறியியல் திணைக்களம்,<br>மொறட்டுவ பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர் |
| திருமதி. டப்ளியு. டி. யி. நளிகா | - | உறுப்பினர்<br>(ஜுலை 2016 இலிருந்து) |
| கலாநிதி எம். ரி. எம். மஹீஸ்<br>(சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியற் துறை,<br>கொழும்புப் பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர் |
| கலாநிதி மாஹிம் மெண்டிஸ்<br>(சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானங்கள் பீடம்,<br>இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர் |
| திரு. பீ. முத்துக்குமாரசுவாமி<br>(முன்னாள் அதிபர், இந்துக் கல்லூரி, கொழும்பு – 04) | - | உறுப்பினர் |

திரு. டப்ளியு. எம். என். ஜே. புஷ்பகுமார - உறுப்பினர்
(ஆணையாளர் நாயகம், பரீட்சைகள், தேசிய மதிப்பீடுகள் மற்றும் பரீட்சைகள் சேவை)

கலாநிதி பிரசாத் விமலரத்ன - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கணினிப் பாடசாலை, கொழும்புப் பல்கலைக்கழகம்.)

கலாநிதி பிரியந்த பிரேமகுமார - உறுப்பினர்
(செயலாளர், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு)

திரு. ஐ. எம். கே. பீ. இலங்கசிங்க - உறுப்பினர் (05-12-2016 இலிருந்து)
(ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கல்வி அமைச்சு)

வண. கலாநிதி மாபுல்கொட சுமணரத்ன தேரர் - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம், மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்)

திரு. எம். எவ். எஸ். பி. ஜயவர்த்தன - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்)

திரு. என். வி. ஏ. எஸ். சமரசிங்க - உறுப்பினர்
(பதிற் பிரதிப் பணிப்பாளர் நாயகம், ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக்கல்வி)

திருமதி. வி. டி. சி. பி. பெரேரா - கல்வி அலுவல்கள் சபையின் செயலாளர் (ஜனவரி 2016 வரை)
(பணிப்பாளர், வெளியக மூலவள முகாமைத்துவ அலகு, தே.க.நி)

திருமதி. ஜி. எச். அசோகா - கல்வி அலுவல்கள் சபையின் செயலாளர் (2016 பெப்ரவரியில் இருந்து)
(பதிற் பணிப்பாளர், இருமொழிக் கல்வித் துறை, தே.க.நி)

பேரவையினதும், கல்விசார் அலுவல்கள் சபையினதும் வழிநடத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் தேசிய கல்வி நிறுவகமானது பின்வரும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் கீழ் தன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

## 2.3 பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்

பணிப்பாளர் நாயகத்தின் செயலகம், பரீட்சைகள் துறை, உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வெளியக மூலவள முகாமைத்துவ அலகு என்பன பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன. பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் பேரவையினதும், கல்விசார் அலுவல்கள் சபையினதும் நடவடிக்கைகளைக் கூட்டிணைக்கிறது. சென்ற வருடத்தின்போது 07 பேரவைச் சந்திப்புக்களும், 14 கல்விசார் அலுவல்கள் சபையின் சந்திப்புக்களும் மற்றும் ஒரு இணைந்த சந்திப்பும் நடைபெற்றன. உள்ளகக் கணக்காய்வு அலகு, உள்ளகக் கணக்காய்விற்கு பொறுப்பாகக் இயங்குவதுடன் முகாமையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல் என்பவை வலுப்பெற உதவி வருகின்றது. இவ் உள்ளகக் கணக்காய்வு அலகினால் 75,000/- ரூபாவிற்கும் மேற்பட்ட கொடுப்பனவு வவுச்சர்கள் 50,000/- மேற்பட்ட பல்வேறு துறைகளுக்கான செயலமர்வு மதிப்பீடுகள் என்பன 974 பரிசீலிக்கப்பட்டன.

வெளியக மூல வள முகாமைத்துவ அலகு உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு ஊழியர் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவிருக்கின்றது.

**2016 ஆம் ஆண்டிற்கான அடைவுகள்:**

32 உத்தியோகத்தர்களுக்கு குறுகிய கால வெளிநாட்டு கற்கை நிகழ்ச்சிகளுக்கும் அதாவது செயலமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் என்பவற்றில் பங்குபற்ற ஒழுங்குகளை செய்திருந்தது.
11 கல்விசார் உத்தியோகத்தர்கள் கலாநிதி பட்டப் படிப்பினை மலேசிய முகாமைத்துவ விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் தொடருவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

## 2.4 பீடங்களும் பிரிவுகளும்

2016 இல் நிறுவகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பில் வெவ்வேறு துறைகளும் அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள முறை கீழே தரப்படுகின்றது.

### 2.4.1 மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

- முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் துறை
- சிங்கள மொழித் துறை
- தமிழ் மொழித் துறை

- ஆங்கில மொழித் துறை
- அழகியற் கல்வித் துறை
- சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை
- சமூக விஞ்ஞானங்கள் துறை

### 2.4.2 விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பப் பீடம்

- விஞ்ஞானத் துறை
- கணிதத் துறை
- தொழில் நுட்பத் துறை
- வணிகத் துறை
- தகவல் தொழினுட்ப மற்றும் கல்வி முகாமைத்துவத் தகவற் சேவைகள் துறை
- சுகாதார மற்றும் உடற்கல்வி அலகு
- அச்சிடல் வெளியிடுகைகள் துறை

### 2.4.3 ஆய்வு மற்றும் திட்டமிடல் பீடம்

- திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுத் துறை
- ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை

### 2.4.4 கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்திப் பீடம்

- வாண்மை அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை
- கல்வி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தித் துறை
- வெளிநாட்டுப் பாடநெறிகள் அலகு

### 2.4.5 ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக்கல்விப் பீடம்

- உள்ளடக்கக் கல்வித் துறை
- பாரம்பரியக் கல்வி/வெளிநாட்டு மொழிகள் மற்றும் இரு மொழிக் கல்வித் துறை
- இலத்திரனியற் பரவல் துறை
- ஆலோசனை பகர்தல் அலகு
- திறந்த பாடசாலைகள் அலகு
- ஆசிரியர் கல்வித் துறை
- நிறுவக அபிவிருத்தித் துறை

### 2.4.6 நிர்வாகம், நிதி மற்றும் துணைநிலைச் சேவைகள் பிரிவு

- நிர்வாக மற்றும் மனித வளத் துறை
- நிதித் துறை

- பொறியியல் சேவைகள் மற்றும் பராமரிப்புத் துறை
- நூலக மற்றும் அரும்பொருளகம்
- போக்குவரத்து அலகு

**விசேட நிகழ்வுகள் / 2016 இல் தேசிய கல்வி நிறுவகத்தின் செயலடைவுகள்**

வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் (AIP) 2016 இல் உள்ளடக்கப்பட்ட பாடத்திட்ட அபிவிருத்தி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், வருடாந்த அமுலாக்கத் திட்டத்தில் உள்ளடக்கப் படாத வாண்மை அபிவிருத்திக் கல்வி ஆய்வு அத்துடன் மேலதிக பாடத்திட்ட செயற்பாடுகள் முதலானவை 2016 இல் தேசிய கல்வி நிறுவகத்தில் அமுலாக்கப்பட்டன.

- பாடசலை முறைமையானது 13 வருட கட்டாயக் கல்வியை உறுதி செய்வதற்கு ஏதுவாக 26 திறந்த / பிரயோகப் பாடங்களினதும் மற்றும் பொது உள்ளடக்கத்திற் கான குறித்த அடிப்படை மாற்றங்களை முன்னேற்றுவதற்கான தர மற்றும் பொருத்தப் பாட்டிற்கான கல்வி மற்றும் இடைநிலை மட்டத்திற்கான கலைத்திட்டங்கள் தயாரிக்கப் பட்டன.
- அரசுடைமை சார்ந்த நிறுவனத்தின் நிறுவன பெறுபேற்று கட்டமைப்பு (ORF) தயாரிக்கப்பட்டது.
- 31 டிசம்பர் 2016 இல் நிறுவகத்தின் 30 ஆண்டுகள் பூர்த்தி செய்வதான கொண்டாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

கீழ்வரும் ஏழு கருப்பொருட்களை மையமாகக் கொண்டு விசேட ஆசிரியர் அபிவிருத்தி மற்றும் வாண்மை விருத்தி நிகழ்ச்சிகளுக்கான மொடியுல்கள் தயாரிக்கப்பட்டன. இவை மாகாண மட்டத்தில் ஆசிரியர்களுக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு அவர்களது போதனாவியலுக்கான அறிவினை இற்றைப்படுத்தவும், பாட உள்ளடக்கம் மற்றும் பொதுத் திறன்களோடு ஆசிரியர்கள் குறித்த பாடத்தை பாடசாலைகளில் கற்பிப்பதற்கான பரந்த பயிற்சியினை வழங்கி அறிவினை அதிகரித்து இற்றைப்படுத்தவும் விருத்தி செய்யவும் ஆசிரியர் கல்வியியலாளர்களின் இயலளவின் கற்றல் - கற்பித்தலினை விருத்தி செய்வ தற்கும் வழிகோலும்.

- ஆளுமை மற்றும் வாண்மை விருத்தி
- 21 ஆம் நூற்றாண்டிற்கான கற்பித்தற் திறன்கள்
- தகவற் தொடர்பாடற் தொழினுட்பத்தோடு கற்றல் - கற்பித்தலை வலுவூட்டல்
- போதனாவியல் கலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பிரதான நோக்குகள்
- பயில்வு நாடிகளின் தேர்ச்சிகளை முன்னேற்றுவதற்கான மதிப்பீடுகள்
- விழுமியத்துடனான கல்வி, சமாதானம், விழுமியம் கலைத்திட்டத்தோடு இணைபாட விதான செயற்பாடுகளை ஒன்றிணைத்தல்.
- வகுப்பறை முகாமைத்துவம்: பிரதான எழுவினாக்கள்

இதைத்தவிர, தேசிய கல்வி நிறுவக நிதி நிர்வாக நடவடிக்கைகளில் கீழ்வரும் ஊழியர் களின் நலன்புரி மற்றும் நிறுவக உட்கட்டமைப்பு பணிகளுக்காக, கீழ்வரும் விசேட நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

- அண்ணளவாக பத்து வருடங்கள் வெற்றிடங்களாகவிருந்த கல்விசார் ஊழியர்களின் பற்றாக்குறையினை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
- எல்லா கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் தங்களது துறைகளுக்கேற்றவாறு பாடநெறிகளை தொடர்வதற்கான பிரித்தொதுக்குகைகளுக்கான அட்டவணை தயாரிக்கப்பட்டது.
- காப்புறுதி பரப்புகளுக்கான வாய்ப்புகளையும் அதற்கான மொத்தக் காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்களை அதிகரிப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப் பட்டன.
- நிறுவக ஊழியர்களுக்கு சுத்தமான குடிநீரினை வழங்குவதற்கு ஏதுவாக ஒவ்வொரு துறைக்கும் நீர் வடிகருவிகள் வழங்கப்பட்டன.
- கல்விசார் நடவடிக்கைகளின் செயலடைவுகளுக்கு பாதகமாகக் காணப்பட்ட உபகர ணப் பற்றாக்குறையினை நிவர்த்திப்பதற்காக, ஒவ்வொரு துறைக்கும் அலகிற்கும் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- உத்தியோகத்தர்களின் சுய அபிவிருத்தி திட்டங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு ஊழியர் அபிவிருத்தி திட்டங்களை செயல்முறைபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.
- ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பில் 10 வருட பிழையான கணிப்பீடுகளினால் தீர்க்கப்படா திருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு கொடுபட வேண்டிய தொகைகள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- கொடுப்பனவிற்கான சுற்று நிருபங்கள் திருத்தப்பட்டு வெளிவாரியாக நிறுவகத்திற்கு பங்களிப்புச் செய்யும் வளவாளர்களின் கொடுப்பனவுகள் மாற்றியமைக்கப்படவும் இதுவரையும் கவர்ச்சிகரமானதாக காணப்படாதிருந்த கொடுப்பனவு முறைமை மாற்றங்களோடு உரிய துறைகளின் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- குறித்த பீடங்களுக்குரிய வளவாளர்களின் பெயர்ப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றினூடாக நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் நிபுணர்களின் பங்களிப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொள்ளக்கூடியதாயிருக்கும்.
- கணக்கீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளை சரியாகவும் முறைமையாகவும் மேற் கொள்வதற்கு அது தொடர்பான அறிவினை மேம்படுத்திக் கொள்வதற்கும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் கூட்டிணைவுடன் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

## 3.0 கலைத்திட்ட அபிவிருத்தி

மொழிகள் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமும் விஞ்ஞான தொழினுட்ப பீடமும் நாட்டின் பொதுக் கல்வி தொடர்பான சகல கலைத்திட்ட அபிவிருத்தி விடயங்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றது. தேசிய கல்வி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கலைத்திட்ட அபிவிருத்திப் பணிகள், நாட்டின் பொதுவான கல்வி சார்ந்த விடயங்கள் யாவற்றிற்கும் மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்துடன் விஞ்ஞான தொழில்நுட்ப பீடம் பொறுப்பு வாய்ந்ததாக செயற்பட்டு 69 கலைத்திட்டங்கள் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. செயற்றிட்டங்களானவை 2016 இல் ஆறு துறைகளைக் கொண்ட மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பீடம், விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தின் ஐந்து துறைகளிலும் மற்றும் மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விப் பீடத்தின் பாரம்பரிய மொழிகள் மற்றும் இரு மொழிக் கலைத்திட்ட விருத்திச் செயற்பாடுகள் யாவும் கீழ்வரும் நோக்கங்களை எய்துவதற்காகவும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

- சமூக, கலாசார, பொருளாதார மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்குப் பொருந்தக் கூடிய பாடத்திட்டத்தைத் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்தல்.
- பாடத்திட்டத்தைப் புதிய முறையில் அமைப்பதற்கான, கருத்துள்ள செயல்முறைக் கற்றல் கற்பித்தல் செய்முறைக்கான புதிய நுணுக்கங்களைப் பாடசாலைகளுக்கு அறிமுகஞ் செய்தல்.
- பாடத்திட்டத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் அமுலாக்குதல் என்ப வற்றில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில்சார் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் சம்பந்தமான தகவல்களை வெளிப் படுத்தும்முகமான கல்வியின் தரம் பற்றிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும் கற்கைநெறிகளை அமுலாக்கல்.
- கற்றல்-கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் வெற்றிக்காக புதிய முறை யியல்களை அறிமுகம் செய்தல்.
- தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தேசிய, சர்வதேச மொழிகளில் மாணவர்களின் தேர்ச்சியை விருத்தி செய்தல்.
- சுகாதாரம் மற்றும் இயற்கை மரபுரிமை என்பவற்றைப் பாதுகாத்துப் பேணி மாணவர் களுக்கான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- சமூகத்தில் உள்ள பல்வேறு இனக் குழுமங்களின் மொழி வேறுபாடுகள், சமய, கலா சாரப் பெறுமதிகள் பற்றி மாணவர்களின் தேர்ச்சியை விருத்தி செய்தல்.

இதன் விளைவாக, 2012 இல் இவ்விலக்குகளை எய்துவதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2015 இல் 6 மற்றும் 10 ஆம் தரங்களுக்குரிய கலைத்திட்டத்தை அமுல்படுத்தலும் பகுத்தாய்வும் பாடசாலைகளில் அமுல்படுத்துபவனவற்றைக் கண்காணித்த லும் மற்றும் இரண்டாம் கட்டமாக 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக 1, 7

மற்றும் 11 ஆம் தரங்களுக்குரிய ஆசிரியர் வழிகாட்டிகளை மாகாண பயிற்றுனர்களைப் பயிற்றுவிப்பதற்காகத் தயாரித்தல்; 2017 ஆம் ஆண்டில் கலைத் திட்டத்தை அமுல் படுத்துவதற்காக 2, 8 மற்றும் 12 தரங்களுக்குரிய பாடத்திட்டத்தைத் தயாரித்தல் என்பன 2016 ஆம் ஆண்டின் பணிகளாயிருந்தன.

கீழ்வரும் கலைத்திட்ட விருத்தி, திட்ட அமுல்படுத்துகை, எல்லா தரங்களுக்கும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டதுடன் அடுத்த கட்டமாக 2, 8 மற்றும் 12 ஆந் தரங்களுக்காக 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இப்பணியானது தேசிய கல்வி நிறுவகத்தினால் மேற்கொள்ளும் ஒழுங்கு முறை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2012 – 2020 கலைத்திட்ட அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்தப்படும் முறை

| **இலக்குகள்** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** | **2017** | **2018** | **2019** | **2020** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடத்திட்ட சட்டக தயாரிப்பு | தரம் 1-5, 6-11 | | | | | | | | |
| பாடத்திட்ட தயாரிப்பு | தரங்கள் 6, 10 | தரங்கள் 1, 7, 11 | தரங்கள் 2, 8 | தரங்கள் 3, 9, 12 மற்றும் 13 | தரம் 4 | தரம் 5 | | | |
| ஆசிரியர் கைந்நூல்கள் தயாரிப்பு | | தரங்கள் 6, 10 | தரங்கள் 1, 7, 11 | தரங்கள் 2, 8, 12 | தரங்கள் 3, 9, 13 | தரம் 4 | தரம் 5 | | |
| அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள் | | | தரங்கள் 6, 10 | தரங்கள் 1, 7, 11 | தரங்கள் 2, 8, 12 | தரங்கள் 3, 9, 13 | தரம் 4 | தரம் 5 | |
| அமுல்படுத்தப் படவுள்ள பாடத்திட்டங்கள் | | | | தரங்கள் 6, 10 | தரங்கள் 1, 7, 11 | தரங்கள் 2, 8, 12 | தரங்கள் 3, 9, 13 | தரம் 4 | தரம் 5 |

கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக கீழ்வரும் செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டில் இடம் பெற்றது.

- தரம் 4, 12 இற்குரிய 09 முதலாவது வரைவு தயாரிக்கப்பட்டதுடன் தரம் 2 இற்குரிய ஆசிரியர் வழிகாட்டிகள், தரம் 3 இற்கு திருத்தப்பட்ட ஆசிரியர் வழிகாட்டிகள் 12 உம் பரீட்சிக்கப்பட்டு கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளுக்கமைய விருத்தி செய்யப்பட்ட ஆரம்பக் கல்வி வழிகாட்டிகளாக அமைந்தன
- கட்டாய கற்றல் தேர்ச்சியை மேம்படுத்துவதற்கான தரக் கணிப்பீடு தொடர்பில் 650 ஆரம்ப நிலை குழு அங்கத்தவர்களைக் கொண்டு அறிவூட்டம் செய்யும் செயலமர்வின் பிரதான கட்டம் இடம் பெற்றதுடன் அதன் மூலம் கட்டாய கற்றல் தேர்ச்சிக்கான இறுதி மதிப்பீடு வழிகாட்டல் நூல் தயாரிக்கப்பட்டது.
- முன்பிள்ளை கல்வி தொடர்பான கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டதுடன் முன்பிள்ளை அபிவிருத்தி பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- பிள்ளை அபிவிருத்தி நியமங்களின்(வயது 9 வருடங்கள்)முழுமையான ஆய்வறிக்கை முழுமைப்படுத்தப்பட்டிருப்பதுடன் இது முன்பிள்ளை அபிவிருத்தியின் நியமங்களை இனங்காணுவதற்கு உதவும்.
- தரம் 1 இன் பின்னூட்டல் பொறிமுறையின் அபிவிருத்தி அறிக்கையொன்று தயாரிக்கப் பட்டது.
- ஆரம்ப கலைத்திட்டத்தினை உறுதிப்படுத்துவதற்கான சமூக ஒத்திசைவு, அனர்த்த அபாய குறைப்பு, காலநிலை மாற்றம் மற்றும் பாடசாலை பாதுகாப்பு தொடர்பிலான விடய உள்ளடக்கங்களோடு ஓர் சம்பவத் திரட்டுப் புத்தகம் தயாரிக்கப்பட்டது.
- தரங்கள் 9, 13 என்பவற்றிற்கான ஆசிரியர் வழிகாட்டிகள் 16 இன் இறுதி வரைவு களும் 13 மற்றும் 11 ஆந் தரங்களுக்குரிய ஆசிரியர் வழிகாட்டிகளின் இறுதி வரைவு களும் இடைநிலைக் கல்வியின் தரம் 12 இற்கான கற்றல் - கற்பித்தல் செயன் முறையின் ஆசிரியர் வழிகாட்டிகளின் இறுதி வரைவுகளும் தயாரிக்கப்பட்டன.
- தரம் 8 இற்குரிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், பாடப் பணிப்பாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் 7,200 பேரும், தரம் 12 இற்குரிய 12,280 ஆசிரியர்களும் பகுத்தறியப்பட்ட கலைத்திட்டம் தொடர்பில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தனர்.
- தரம் 6 - 13 வரையிலான 42 மேலதிக கற்றல் சாதனங்களின் வரைவுகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- கற்றல் - கற்பித்தல் செயன்முறையை முன்னேற்றுவதற்கான 6 – 13 ஆந் தரங்களுக் கான பல்வேறு பாடங்களுக்குரிய மென்பொருட்கள் 30 பூர்த்தி செய்யப்பட்டன.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான கலைச் சொற்களின் அகராதி மேம் படுத்தப்பட்டது.
- க.பொ.த. (சா.த) மாணவர்களின் கணித பாட பெறுபேற்றினை உயர்த்துவதற்காக, தரங்கள் 9, 10 மற்றும் 11 என்பவற்றிற்கான வினாத்தாள்களின் விடய உருப்படி களோடும் இறுவட்டு மற்றும் தரம் 9 இன் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை வலுவூட்டுவதற்கான செயல் நூலொன்று தயாரிக்கப்பட்டது.
- விஞ்ஞானத் துறையின் தொழில் வாய்ப்புகள் பற்றிய தொகுப்பொன்று தயாரிக்கப் பட்டது.
- பாடசாலைகளுக்குரிய 6 பாடப்பரப்புகளுக்கான தொழில் முறைகளின் கையேடொன்று தயாரிக்கப்பட்டது.
- இருமொழிக் கல்வியை விருத்தி செய்வதற்கான பயிற்றுனர்களுக்கான ஆவண நோக் கெல்லைகளுடனான இரண்டாவது கையேட்டின் இறுதிப்பிரதி பூர்த்தி செய்யப்பட்டது.
- தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கான அளவீடுகளின் இறுதி ஆய்வறிக்கை பூரணப் படுத்தப்பட்டது.

- 290 மாகாண உத்தியோகத்தர்களுக்கு இருமொழிக் கல்வியை அறிவூட்டம் செய்வ தற்கான நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- இருமொழிக் கல்விக்கான 228 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**பாடப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர் களுக்கு 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆற்றலை அபிவிருத்தி செய்வதற் கான நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய கல்வி நிறுவக உத்தியோகத்தர்களினால் பாடப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் என்போருக்கு நேரடியாக தரம் 1 – 11 வரையிலும் உயர்தர வகுப்புகளுக்கும் (தரங்கள் 12 மற்றும் 13) புதிய பாடத்திட்டத்தின் திசைமுகப் படுத்தல் அமர்வுகளும் பாட சம்பந்தமான அறிவினை இற்றைப்படுத்தும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. மாகாண மட்டப் பயிற்சி நிகழ்ச்சிகள் தேசிய கல்வி நிறுவகத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட பாடப் பணிப்பாளர்களாலும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாலும் ஒழுங்கமைப்பு செய்யப்படுகின்றன. இதன்படி, 7,200 சேவைக்கால ஆலோசகர்களும்/ பாடப் பணிப்பாளர்களும் 12,280 உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் பயிற்றப்பட்டனர்.

## 4.0 கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தியும் முகாமைத்துவமும்

கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களின் முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ திறமை களை ஊக்குவிப்பதே மீப்பேயில் அமைக்கப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவக வளாகத்தின் பிரதான பணியாகும். இது ''கல்வித் துறையில் ஈடுபடுவோரின் தொழில்சார் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சியினை விருத்தி செய்தல்'' எனும் நோக்கத்தில் இயங்கி வருகின்றது.

மேற்குறித்த இலக்கினை அடைவதற்கு, பீடத்தினால் கல்வி முகாமைத்துவம் மற்றும் பாடசாலை நிர்வாகம் சார்ந்த விடயங்களை டிப்ளோமா மட்டத்திலிருந்து முதுமாணி பட்டப் படிப்பு மட்டம் வரை கொண்டு செல்ல பல்வேறு பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

- மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக, பீடமானது இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) அலுவலர்களுக்காகக் சேவைக்கு முன்பதான மற்றும் சேவைக்கால பாட நெறிகளை நடாத்தி வருகின்றது.
- இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்படும் புதிய உத்தியோகத்தர்களுக் கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட நீண்டகால, தொடக்க நிலைப் பாடநெறிகளை நடாத்தியமை.
- ''1000 பாடசாலைகள் அபிவிருத்தி'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கும் பிரதி அதிபர்களுக்குமாக இரண்டு ஐந்து நாட் களைக் கொண்ட விசேட பயிற்சி பாடநெறிகளை செயற்படுத்தியது.

- இற்றைப்படுத்திய தேர்ச்சி கட்டமைப்பிற்கு பொருத்தப்பாடாக, பாடநெறிகளின் உள்ளடக்கம், பயிற்சி கையேடு மற்றும் கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்கொடுக்கப்பட்டமை.

**2016 ஆம் ஆண்டு கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி பீடத்தினால் செயற்படுத்தப்பட்ட பாடநெறிகளில் முன்னேற்றத்தினை காட்டும் அட்டவணை**

| பாடநெறியின் பெயர் | பொறுப்புவாய்ந்த துறை | இடம் | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| <u>பட்டப்பின்படிப்பு பாடநெறிகள்</u><br>(M.Sc கல்வி முகாமைத்துவம்) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 73 |
| <u>பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகள்</u><br>கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (முழுநேர / பகுதிநேர) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 171 |
| <u>டிப்ளோமா பாடநெறிகள்</u><br>பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 283 |
| <u>குறுகிய கால பாடப் பொருள் சார்பான பாடநெறிகள்</u><br>கல்வி முகாமைத்துவத்தில் பாடற்பொருள் சார்பான பாடநெறி (சிங்களம் / தமிழ்) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 763 |
| அதிபர் வாண்மைப் பாடநெறி | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 275 |
| <u>வெளிநாட்டு மாணவர்களுக்கான பாடநெறிகள்</u><br>விஞ்ஞான முதுமாணி (கல்வித் தலைமைத்துவ முகாமைத்துவம்) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 33 |

## 5.0 ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது, புதிது காணும் ஆசிரியர்கல்வி முறைகளினைப் பயன்படுத்தி, பாரிய அளவிலும், வெவ்வேறான மட்டங்களிலுமுள்ள ஆசிரியர் குழுக்களின் தொழில்சார் அபிவிருத்தித் தேவைகளுக்கு உசாத்துணை வழங்கும் ஒரு நீண்ட மற்றும் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது. எந்த ஒரு பாடத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங் களை அடைவதும் அல்லது இவைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வேறு அபிவிருத்தி முன்னோடியும் ஆசிரியர் சம்பந்தப்பட்ட காரணிகளில் தங்கியுள்ளது.

திறன்மிக்க செயற்பாட்டாளர்களாக வருவதற்கு தேவையாக அறிந்து கொள்ளும் தன்மை யும், ஆசிரியர்களுக்கான நம்பிக்கை, தேர்ச்சி என்பனவற்றை வழங்கும் நோக்கமும் தரும் உயர் தரமான பட்டப்படிப்புப் பாடநெறிகள் வழங்குவதும் தேவையாக உள்ளது. இந்த நோக்கத்திற்காக, தரம்மிக்க ஆசிரியர் கல்வித் துறைகள் மற்றும் சில பாடத்திட்ட

அபிவிருத்தி துறைகளும், தராதரப் பத்திர மட்டத்திலிருந்து தத்துவ முதுமாணி மட்டம் வரையான பல்வேறு ஆசிரியர் கல்விப் பாடநெறிகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த நோக்கங்களுக்காக தேசிய கல்வி நிறுவகம் நாடெங்கும் பரந்து காணப்படும் அதன் பிராந்திய நிலையங்களோடும் நெருங்கிய கூட்டுறவினைக் கொண்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தினால் அமுலாக்கப்பட்ட எல்லாவிதமான பட்டப்பின்படிப்பு, பட்டப் படிப்பு, பட்டமில்லாத கற்கைநெறிகள் யாவும் கல்விசார் ஆளணிக்குத் தேவையானதாகக் கருதும் தொழில்சார் அபிவிருத்தியையே பிரதான குறிக்கோள்களாகக் கொண்டுள்ளன. அத்துடன் அதற்குரிய பொருத்தமான குழுவுக்குப் பின்வரும் ஒத்துழைப்பு நடவடிக்கை களைத் தர எதிர்பார்க்கிறது.

- கல்வியின் புதிய போக்குகளுடன் இணக்கப்படுதல்.
- பரந்தளவிலான பாடஅறிவுடன் வகுப்பறையில் அதை எவ்வாறு பிரயோகிப்பது எனக் கற்றல்.
- உயர்தரத்திலான கற்பித்தலை விருத்தி செய்தலும் வகுப்பறை முகாமைத்துவ திறன்களை விருத்தி செய்தலும்.
- தனித்தனியான வேறுபாடுகளுக்கு இடம்கொடுத்து மாணவர்களுடன் ஆக்கபூர்வமான பணியில் ஈடுபடுதல்.
- பெற்றோர்களுடன் அவர்களின் பலங்கள் மற்றும் இயலுமைகள் பற்றிய அறிவுடன் ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபடுதல்.
- சிறந்த கற்பித்தலுக்கான அடிப்படையை வழங்கும் பொதுவான தேர்ச்சிகளின் ஒரு ஒழுங்குமுறையை விருத்தி செய்தல்.
- பணி சார்பான செயல்முறைகளை விருத்தி செய்ய உதவும் சிறிய அளவிலான ஆய்வுகளில் ஈடுபடுதல்.
- தேர்ச்சி அடிப்படையிலான பெறுபேற்று மதிப்பீடுகளுடனான செயல்முறைகளுடன் இணக்கப்பாட்டினை கொண்டிருத்தல்.
- கற்பித்தலுக்கான சுய அவதி அணுகுமுறையொன்றை விருத்தி செய்தல்.

புதிய கல்விமாணி (பொறியியல்) நிகழ்ச்சித் திட்டத்தின் பாடத்திட்ட அபிவிருத்தியும் 2013 இல் புகுத்தப்பட்ட தொழில்நுட்பப் பாடங்களை கற்பிக்கும் 260 ஆசிரியர்களின் நியமனமும் 2016 இல் நிறுவகத்தின் பிரதான பெறுபேறுகளில் ஒன்றாகும்.

பின்வரும் அட்டவணையானது, மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினதும் அத்துடன் ஆசிரியர் கல்வி மாற்றுக்கல்விப் பீடத்தினதும் பல்வேறு துறை களினால் அமுலாக்கப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

**ஆசிரியர் கல்விப் பாடநெறிகளின் விபரம் - 2016**

| பாடநெறி | பொறுப்பான துறை | பாடநெறி நடைபெறும் இடம் | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| <u>**பட்டப்பின்படிப்புப் பாடநெறிகள்**</u><br>கல்வி முதுமாணி | ஆசிரியர் கல்வி | தே.க.நி (யாழ்ப்பாண நிலையம்) | 265 |
| <u>**பட்டப்பின் டிப்ளோமா பாடநெறிகள்**</u><br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா | ஆசிரியர் கல்வி | தே.க.நி+ 24 பிராந்திய நிலையங்கள் | 4160 |
| <u>**பட்டப்படிப்புப் பாடநெறிகள்**</u><br>கல்வி இளமாணி<br>கல்வி இளமாணி (பொறியியல்) | ஆசிரியர் கல்வி<br>ஆசிரியர் கல்வி | தே.க.நி+ 24 பிராந்திய நிலையங்கள் | 1140<br>263 |
| <u>**டிப்ளோமா பாடநெறிகள்**</u><br>இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பித்தலில் டிப்ளோமா<br>முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வியில் டிப்ளோமா<br>விசேட கல்வியில் டிப்ளோமா<br>சைகை மொழியில் டிப்ளோமா<br>வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலில் டிப்ளோமா | ஆங்கிலம்<br>ஆரம்பக்கல்வி<br>உள்ளடக்கக் கல்வி<br>உள்ளடக்கக் கல்வி<br>ஆலோசனை பகர்தல் அலகு | தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி | 14<br>36<br>61<br>20<br>46 |
| பிறெயில் மொழி கருப்பொருட் பாடநெறி | உள்ளடக்கக் கல்வி | தே.க.நி | 13 |

## 5.1 நிறுவன அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது சேவைக்கு முன்னதான ஆசிரியர்களுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும், சேவையிலுள்ள ஆசிரியர்களினது ஆசிரியர் கலாசாலை களினதும் கலைத் திட்டத்திற்குப் பொறுப்பாக விளங்குகின்றது. கடந்த வருட காலப் பகுதியில் கீழ்வரும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

- கல்வி இளமாணிப் பட்டத்திற்கான பிரேரித்துரைக்கப்பட்டுள்ள 42 பாடத்திட்டங்களுள் 37 பாடத்திட்டங்களின் பணிகள் தேசிய கல்வியற் கல்லூரிகளால் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.
- இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு ஏதுவாக, 294 தர்மாச் சாரிய ஆசிரியர்களுக்கான பாடநெறி அமர்வுகள் நடாத்தப்பட்டன.

## 5.2 பரீட்சைகள்

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற பல்வேறுபட்ட பாடநெறிகளை வினைத் திறனாகவும் விளைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு பரீட்சைகள் துறை பொறுப்பு வாய்ந்த தாக திகழ்கின்றது. பரீட்சைகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்கல் என்பவற்றிற்காக, 2016 ஆம் ஆண்டில் பரீட்சைகள் துறை கீழ்வருவனவற்றிற்கு பணியாற்றியிருந்தது.

- கல்வி முகாமைத்துவத்திற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா (2014/2015)
- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா (பகுதி நேரம் - 2016 - இறுதி)
- இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான டிப்ளோமா 2016
- பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா 2014/2015 (இறுதி) – 2016
- ஆலோசனை பகர்தலுக்கான டிப்ளோமா 2015/2016 (இறுதி)
- கல்வி இளமாணி (பகுதி II – மீட்டல்)
- கணிதத்தினை கற்பிப்பதற்கான உயர் சான்றிதழ் பாடநெறி 2015 - இறுதிப் பரீட்சை 2016.
- கல்வி இளமாணி (நுழைவு)
- முன்பிள்ளை அபிவிருத்தி டிப்ளோமா 2015/2016 (இறுதி) – 2016
- சைகை மொழி டிப்ளோமா – 2016 (இறுதி)
- விசேட கல்வி டிப்ளோமா – 2016 (இறுதி)
- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா (மீட்டல்)
- ஜப்பானிய மொழியை பிறநாட்டு மொழியொன்றாக கற்பித்தல் 2015/2016 (இறுதி)
- கல்வி இளமாணி 2013/2015 (பகுதி II) – 2016
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (முழுநேரம்) 2016 (இறுதி)
- பிறையில் கல்வியில் சான்றிதழ் பாடநெறி (இறுதி) 2016
- கணிதத்தினை கற்பிப்பதற்கான உயர் சான்றிதழ் பாடநெறி – 2015 - இறுதிப்பரீட்சை
- இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான டிப்ளோமா 2016/2017 (இறுதி)

### 2016 இல் நடத்தப்பட்ட மேலதிக பரீட்சைகள்

- இலங்கை அதிபர் சேவையிலுள்ளவர்களுக்கான திசைமுகப்படுத்தற் பரீட்சை – 2016
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (நுழைவு) 2016

## 6.0 மாற்றுக் கல்வி

பல்வேறுபட்ட காரணங்களினால் முறைசார்ந்த கல்வியை தவறவிட்டவர்களுக்கு பரந்தளவில் கல்வி வாய்ப்புகளை வழங்குவதை மாற்றுக் கல்வி நோக்காகக் கொண்டிருக்கிறது. இது தொடர்பில் அனைவருக்கும் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி என்ற எண்ணக்கருக்களை கருத்திற் கொண்டு கிடைக்கக்கூடியதான நவீன தொழில் நுட்பம் மற்றும் ஏனைய துணைச் சேவைகளையும் உச்ச அளவில் பயன்படுத்தியும் விரிவுபடுத்தியும் இம்முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உட்படுத்தற் கல்வித்துறை, இலத்திரனியற் பரவற் துறை, ஆலோசனை பகர்தல் அலகு மற்றும் திறந்த பாடசாலைகள் அலகு என்பன மாற்றுக் கல்வி நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பானதாகவும் வழங்குவதாகவும் உள்ளது.

### 6.1 உட்படுத்தற் கல்வித்துறை

அனைவருக்கும் கல்வி வழங்கும் எண்ணக்கருவினை அமுல்படுத்துவதில் உட்படுத்தற் கல்வித் துறையானது முக்கிய பங்கினை கொண்டுள்ளது. விசேடத் தேவையுள்ள பிள்ளை களின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யக்கூடியவாறு தற்போதுள்ள கலைத்திட்டத்திற்கு ஏற்றவாறு துறைசார்ந்த ஆசிரியர்களையும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை பயிற்று விக்கும் பணிகளோடு உசாத்துணை நூல்களை தயாரித்தல் மற்றும் உட்படுத்தற் கல்வி தொடர்பானதும், சைகை மொழி தொடர்பான பாடநெறிகளை நடத்தலும் இத்துறையின் பிரதான பணிகளாகும்.

- 04 இறுதி வரைவு வளநூல்கள் பூரணப்படுத்தப்பட்டன:- ஒட்டிசத்துடனான பிள்ளைகள், பல்வேறு இயலாமையையுடைய பிள்ளைகள், பிறையில், சைகை மொழியினை தரமாக கற்பிப்பதற்கு (பௌத்தம்) விசேடக் கல்வியின் தரத்தை முன்னேற்றுவதற்கான நூல்கள்
- விசேடக் கல்விக்கான சஞ்சிகை.
- சைகை மொழியினை போதிப்பதற்காக இரண்டு DVD கள் தயாரிக்கப்பட்டன.
- விசேடக் கல்வி ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காக, 720 சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களை பயிற்றுவித்தல்.

### 6.2 இலத்திரனியல் பரவல்

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை சமூகத்தை மட்டுமன்றி, வெளியிலுள்ள சமூகத்தையும் இலத்திரனியல் கற்றல் உபரணங்களாகிய தொலைக்காட்சி, வானொலி மற்றும் கவர்ச்சியான, வினைத்திறன்மிக்க கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன் படுத்தி வரவேற்றழைக்கும் சமிக்ஞையை வழங்குகிறது. இத்தகைய உபகரணங்கள் சம்பிரதாயம் அல்லாத கல்விப் புலங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அழகியற் முறை களான பாடல்கள், சங்கீதம் மற்றும் நாடகம் என்பவற்றின் ஊடாக பாடத்திட்டத்தின் உயர்தர நிலையிலுள்ள கருத்துருக்களை விளக்கவும், காலத்திற்குக்காலம் மாற்றமடை

கின்ற, பாடத்திட்ட விடயங்களின் மீது பாடசாலைச் சமூகம் விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும் என்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டின் இறுதியில் கீழ்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- ஆரம்ப இடைநிலை மட்டங்களிலுள்ள கற்றல் - கற்பித்தல் செய்முறைகளை வலுவூட்டுவதற்கு 10 மேலதிக செவிப்புல சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.
- கல்வி மறுசீரமைப்பிற்காக அறிமுகப்படுத்தப்பட்டு (2015 ஆம் ஆண்டில் பகுத்தறிவு செய்யப்பட்ட கலைத்திட்டத்தை மேம்படுத்துவதற்காக 20 DVD நிகழ்ச்சிகள் தயாரிக் கப்பட்டன.

## 6.3 ஆலோசனை பகர்தல்

கல்வி சமூகத்தினது உளவியற் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அது தொடர்பில் அர்ப்பணிப்புடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக 2006 ஜுன் மாதத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவையின் அங்கீகாரத்ததுடன் ஆலோசனை பகர்தல் அலகு நிறுவப் பட்டது.

2012 ஆம் ஆண்டில் இவ்வலகு கீழ்வரும் பணிகளை மேற்கொண்டிருந்தது.

- சப்பிரகமுவ, மத்திய, வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களினுள் ஆசிரியர் களின் ஆலோசனை பகர்தல் சேவையினை மேம்படுத்துவதற்கு 29 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- ஆறு துறைகளுக்கான தொழில் வழிகாட்டல் / தொழில் வழிகாட்டியொன்று தயாரிக் கப்பட்டது. (வாகன இயக்கம், கட்டட நிர்மாணம், ஆடை புடைவைத் தொழிற்றுறை, சுற்றுலா விடுதி, வங்கி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்.)

## 6.4 திறந்த கற்றல்

திறந்த பாடசாலைகள் அலகு முறைக்கல்வியை பல்வேறுபட்ட காரணங்களினால் தவற விட்டவர்களின் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு தொலைக்கல்விப் பாடநெறிகளினூடாக அதனை மீளவும் வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது.

இக்கற்பித்தலானது, கல்வியை பயில்வு நாடிகளிடையே கொண்டு செல்வதற்காக, தொலை தூர மற்றும் திறந்த கல்வி அணுகுமுறைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. பயில்வு நாடிகளின் கல்வித் தகைமைகளைக் கருதாது தொழில் அல்லது சமூகத் தேவைகளுக் கிணங்க தமக்குப் பொருத்தமான கற்றல், கற்றல் முறை, எந்நிலையிலிருந்தும் கற்றலை ஆரம்பித்தல் என்பவற்றை தமக்கேற்றாற் போல் தெரிவு செய்வதற்கான வசதியையும், வாய்ப்பையும் திறந்த பாடசாலைகள் அலகு வழங்கி வருகின்றது.

- இடைநிலைக்கு கற்பிக்கும் போதனாசிரியர்களுக்காக இரண்டு மேலதிக கற்றல் தொடுப்புகள் தயாரிக்கப்பட்டன. (கணிதம், விஞ்ஞானம்)
- 678 பயில்வு நாடிகள் திறந்த அடிப்படை பாடநெறியையும் 1417 பயில்வு நாடிகள் இடைநிலை பாடநெறியையும் பூர்த்தி செய்தனர்.

## 7.0 ஆய்வு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, பல்வேறுபட்ட ஆய்வுத் திட்டங்களினூடாக கொள்கை களை வகுத்தல் போன்றவற்றுக்கு பங்களித்து வருகின்றது. இந்தப் பணிகளானவை ஆய்வு அபிவிருத்தித் துறை மற்றும் திட்டமிடல் மதிப்பீட்டுத்துறை, வெளியுறவு மூலவள முகாமைத்துவ அலகு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.1 ஆய்வு அபிவிருத்தி

ஆய்வு அபிவிருத்தித் துறையானது கல்வி ஆய்வினை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல்; முன்னெடுத்தல்; கலந்துரையாடுவதற்கும் விபரிப்பதற்குமான கல்விப் பிரச்சினைகளுக்கான அடித்தளங்களை நிறுவுதல்; கல்வி ஆய்வுக்கான திறன்களை விருத்தி செய்து கொள்ள முனையும் துறைசார்ந்தவர்களுக்கு பாடநெறிகளை நடாத்தல்; உதவி வழங்குதல்; ஆய்வுத் தகவல்களை பகிரல் போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆண்டில் கீழ்வரும் குறிப்பிடத்தக்க பணிகளை ஆய்வு அபிவிருத்தி துறையானது மேற் கொண்டிருந்தது.

- இலங்கையின் கலைத்திட்ட கொள்கை தயாரிப்பின் பின்னணி ஆவணமாக்கப்பட்டது.
- சிறிய பாடசாலைகளின் செயற்பாட்டு விளைவுகள் பற்றிய இறுதி அறிக்கை தயாரிக் கப்பட்டது.
- தரம் 13 மாணவர்களின் வருகை இன்மைக்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய இடைக்கால ஆய்வறிக்கை பூர்த்தி செய்யப்பட்டது.
- ‘‘இலங்கையில் சேவைக்கு முன்னதான தரமான ஆசிரியர்கள்’’ என்பது தொடர்பான இடைக்கால அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டது.
- இலங்கை பௌத்த கல்விக் கழகத்தின் பிரதம நிறைவேற்றதிகாரியும் போஷகருமான கலாநிதி உபாலி எம். சேதர அவர்களால் ‘‘21 ஆம் நூற்றாண்டிற்கான கல்விச் சீர்திருத்தங்கள், கன்னங்கரவிற்கு அப்பால்’’ என்ற தலைப்பில் 27 ஆவது சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர அவர்களின் நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டது.
- 165 பேர்களின் பங்குபற்றுதலுடன் ஆய்வுகளை பகிரங்கப்படுத்துவதற்கான ஆய்வுக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

### 7.2 திட்டமிடலும் மதிப்பீடும்

கிடைக்கக்கூடிய மனித பௌதிக வளங்களை வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் பயன்படுத்தி தேசிய இலக்குகளுடன் இணைந்த வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் இலக்குகளையும் அடைந்து கொள்ளத்தக்க வகையில் 2012 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை, திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு துறை நிறைவேற்றி இருந்தது.

- 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த முன்னேற்ற அறிக்கையும் தற்போதைய அடைவுகள் பற்றிய அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீடுகள், வருடாந்த பாதீடு மற்றும் வருடாந்த அமுலாக்கல் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டன.
- கல்வி அமைச்சு, மத்திய வங்கி போன்ற ஏனைய நிறுவனங்களுக்காக, முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமுலாக்கப்பட்ட நிதியளிப்புச் செயற்றிட்டங்களின் காலாண்டிற்கான செயற்பாடுகளின் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## 8.0 நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள்

நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள் பிரிவின் பணியானது நிதி, பௌதிக, முகாமைத்துவ சேவைகளையும், துணைச் சேவைகளையும் நிறுவகத்தின் ஐந்து கல்வி சார் பீடங்களுக்கு ஏனைய துறைகளுக்கும் அலகுகளுக்கும் வழங்கி வருவதாகும்.

### 8.1 நிர்வாகத் துறை

நிர்வாக மற்றும் துணைச்சேவைகளின் பிரிவின் கீழ் இயங்கி வரும் நிர்வாகத் துறை, சகல நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குப் பொறுப்பாக உள்ளது. அத்தோடு ஊழியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு அவசியமான பயிற்சிகளை உள்நாட்டில் வழங்குகின்றது.

இந்நாளாந்த நிர்வாகச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நிர்வாகத் துறை 2016 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் கீழ்வரும் பணிகளைப் பூர்த்தி செய் திருந்தது.

- நிறுவகத்திற்கு 2 பணிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்தது.
- நிதி உதவிகளையும் கற்கை விடுமுறைகளையும் நிறுவகத்தின் 33 கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழங்கியது.
- வெற்றிடமாகவுள்ள 184 வெற்றிடங்களில் 79 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, முகாமைத்துவ சேவைகள் துறையிடம் அனுமதியினை பெற்றுக் கொண்டது.

## 8.2 நிதித்துறை

நிதித்துறையானது அனைத்து தேவைகளுக்குமான நிதி வளங்களை வழங்குதல்; வருமானச் செலவின அறிக்கைகளை நிதிப் பிரமாணங்களுக்கமைய பேணி அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்கின்றது. இக்குறித்த காலப்பகுதியில் இதன் பணிகளாவன:

- நிலையான சொத்துக்களின் பதிவும் மதிப்பீட்டு நடைமுறைகளும் தயாரித்து முடிக்கப் பட்டிருந்தன.
- 2016 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளை தயாரித்திருந்தது.
- 2016 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

## 8.3 பொறியியற் சேவைகள் மற்றும் பராமரிப்புத் துறை

பொறியியற் துறையானது கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான பௌதிகச் சூழலைப் பேணுவதையும் நிறுவகத்தின் கட்டட நிர்மாணம் பேணுகைப் பணிகள், மின்சார தொலைபேசிச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒதுக்கீடுகள், துப்பரவாக்கல், பாதுகாப்புச் சேவைகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- 27 ஆரம்பித்தல், புதுப்பித்தல் பணிகள் மகரகம, மீபே நிலையங்களில் பூர்த்தியாக்கப் பட்டன.
- மின் வழங்கல் மற்றும் விரிவுபடுத்தல் பணிகள் 4 பூர்த்தியாக்கப்பட்டன.
- தயாரிப்பு மற்றும் பேணுதற் பணிகள் 13 பூர்த்தி செய்யப்பட்டன.
- பிரதான நுழைவாயில் மற்றும் உள்ளக வீதிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் பூர்த்தியாக்கப்பட்டன.

## 8.4 நூலகம்

நிறுவன ஆளணியினரைத் தவிர தேசிய கல்வி நிறுவகத்தின் நூலகமானது பல்கலைக்கழக பணியணியினர்கள், தேசிய கல்வியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் கலாசாலைகளினதும் பணியணியினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வியியலாளர்கள் என்ற வகையில் எல்லோரினதும் கல்வி நோக்கங்களுக்காகவும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

- **பின்வரும் நூல்களும் இறுவட்டுகளும் 2016 ஆம் ஆண்டில் புதிதாக நூலகத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டன.**
    - புத்தகங்கள் - 2440
    - புத்தகங்கள் (நன்கொடைகள் மூலம்) - 89
    - கலைத்திட்ட சாதனங்கள் - 72
    - கல்வியறிக்கைகள் - 83

- உள்நாட்டுச் சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) - 06
- வெளிநாட்டுச் சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) - 10
- செய்தித் தாள்கள் (நன்கொடைகள் மூலம்) - 10
- தேசிய கல்வி நிறுவக சேகரிப்புகள் - 190
- இறுவட்டுகள், DVD கள் - 22

### 8.5 அச்சுப்பதிப்பும் வெளியீடும்

2016 ஆம் ஆண்டில் அச்சுப் பதிப்பும் வெளியீடும் தொடர்பாகக் கீழ்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

- பாடத்திட்டங்கள் - 50
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் - 13
- மேலதிக சாதனங்கள் - 111
- பரீட்சைகளுக்கான சான்றிதழ்கள் - 21
- மொடியுல்கள் - 04
- மேலதிக வெளியீடுகள் - 110
- அழைப்பிதழ்கள் - 04
- ஆசிரியர் பயிற்றுவிப்பு கைந்நூல்கள் - 18

இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகத்தின் கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பிலான ஆவணங்களையும் வெளியீடுகளையும் மேம்படுத்திக் கொள்வதற்காக, 07 புத்தக கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் கிடைத்திருந்தன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஈடியூ/சீ/என்ஐஈ/1/16 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2017 செப்தெம்பர் 30

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய கல்வி நிறுவகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2017 செப்டம்பர் 19 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்பத் தயாரிக்கப்படுதலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதுமானளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் உபயோகப்படும் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய கல்வி நிறுவகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 06

தெற்காசிய ஆசிரியர் பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய இறுதி விலைப்பட்டியல் தொகையான ரூபா 8,908,928 கட்டிடங்களின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்த போதும், 2017 சனவரியில் உள்ளவாறான ரூபா 5,142,899 மாத்திரமே கொடுப்பனவு செய்யப்பட்டமையால், 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் கட்டிடப் பெறுமதி ரூபா 3,766,029 அதிகரித்தும் தேய்மானம் ரூபா 376,603 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

நியமத்தினது 47 ஆம் பிரிவின் பிரகாரம், சொத்து ஒன்றினது நியாயபூர்வமான பெறுமதி அதன் உள்ளவாறான பெறுமதியை விட குறிப்பிடத்தக்களவு வேறுபடும் போது அது மீளப்பெறுமதியிடப்பட வேண்டுமாயினும், நிறுவகத்தின் சொத்துக்கள் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீளப் பெறுமதியிடப்படவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09

நிறுவகத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், கையிருப்பைப் பெறுமதியிடும் போது கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதியிலேயே அது மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்பனைக்கிருந்த புத்தகக் கையிருப்பு விற்பனை விலையாகிய ரூபா 22,843,838 பெறுமதியிலேயே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதால் பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் ஆண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிறுவகமானது முன்னைய ஆண்டுகளில் நிலையான சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதன் மூலம் ஏற்பட்ட இலாப, நட்டங்களை கைதவிர்ப்பு இலாப நிதியம் எனும் பெயரிலான நிதியத்தினூடாக சீராக்கல் செய்ததால், மீளாய்வாண்டினது இறுதியில் அதன் மீதி ரூபா 3,640,844 ஆகவிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் நிலவியதால் அதன் சமப்படுத்தலானது கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது.

(i) காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினம் ரூபா 7,151,969 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) நடைமுறை அல்லாத சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 7,786,795 காசு மூலமான கொடுப்பனவாகக் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(iii) இடைப் போக்கிலுள்ள கையிருப்பில் குறிப்பிடப்பட்ட ரூபா 46,991,171 பெறுமதியுடைய நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொழிற்படு மூலதன மாற்றங்களில் காட்டப்பட்டிருந்தன.

(iv) மீளாய்வாண்டில் காசாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை ரூபா 5,353,157 மாத்திரமே. அவ்வாறிருக்க, அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 5,697,314 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 344,157 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் கீழ் மீளாய்வாண்டிற்கான அலுவலகத் தளபாடங்கள், உபகரணங்கள் என்பன சேர்ப்பாகக் குறிப்பிடப்பட்டு அதற்கான தேய்மானமும் மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,614,600 ஆகக் குறிப்பிடப்பட்ட தொகையானது மீண்டும் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இடைப்போக்கில் உள்ள கையிருப்பு மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் அச்சிடப்பட்டு, பாவனையில் ஈடுபடுத்தப்படாது அப்புறப்படுத்தப்பட்டிருந்த பழைய பாட விதானங்களை உள்ளடக்கிய ரூபா 10,369,094 பெறுமதியான ஆசிரியர் வழிகாட்டி , இறுதிக் கையிருப்பில் உள்ளடக்கப்பட்டதால் இறுதிக் கையிருப்பு அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் மீபே கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்த மற்றும் உசாத்துணைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய தொகைக்கு இரு தடவைகள் விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டதன் காரணமாக கட்டிடக் கணக்கிலும் சேர்ந்து நின்ற செலவினக் கணக்கிலும் ரூபா 6,172,195 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான தேய்மானமும் ரூபா 240,605 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது இரு வங்கிக் கணக்குகளுக்கிடையே ஏற்பட்ட காசு மாற்றத்தின் போது ஏற்பட்ட வழுவின் காரணமாக கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினக் கணக்கிலும் பெற வேண்டிய கணக்கிலும் ரூபா 8,843,090 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிறுவகத்திலிருந்து வெளியேறிய 05 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 164,140 அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) ஆண்டின்போது பெறப்பட்ட இடர்க் கடனுக்கான வட்டியாகப் பெறப்பட்ட ரூபா 2,386,738 வருமானத்திலிடப்படாது கடன் நிதியம் ஏனும் பெயரிலான நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட செயலமர்வு முற்பணப் பட்டோலைக்கும் செயலமர்வு முற்பணக் கணக்கினது மீதிக்குமிடையே ரூபா 423,706 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆசிரியர் வித்தியாலயப் பிரிவுத் தகவல்களின் பிரகாரம், முற்கூட்டியே கொடுப்பனவு செய்யப்பட்ட கற்கை நெறிக் கட்டணம் ரூபா 22,692,418 ஆகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 34,577,626 ஆகியமையால் ரூபா 11,885,208 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடசாலைகளது அடிப்படையிலமைந்த மதிப்பாய்வு கேள்வித் தாள்களை அச்சிடுவதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் கல்வி அமைச்சிலிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 3,237,800 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 595,122 மீதியையும் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அவை பெற வேண்டிய மீதிகளாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 5,260,853 ஆகும். இதனுள்ளே 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 372,295 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டினது முடிவளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை.

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினது II ஆம் அத்தியாயத்தின் 13.1.2 ஆம் பிரிவு | பதில் கடமையாற்றுவதற்கு சிபார்சு செய்யப்படும் உத்தியோகத்தர் சகல வழிகளிலும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமாயினும், பல்வேறு சந்தர்ப்பங்களில் எச்சரிக்கைகளுக்குள்ளாகிப் பின்னர் 2007 செப்டம்பர் 15 ஆந் திகதியின் பின்னர் சம்பள ஏற்றமெதனையும் பெற்றிராத உத்தியோகத்தர் ஒருவர் 2016 சனவரி 05 தொடக்கம் பிரதிப் பணிப்பாளர் நாயகம் - மாற்றுவழிக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) 2006 பொருட் கொள்வளவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) பிரிவு | பண்டங்களையோ சேவைகளையோ பெறுவதற்கான ஒப்பந்தங்களை வழங்கும்போது அவை ரூபா 500,000 க்கு மேற்படின் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிறுவகத்தின் அச்சகத்திற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 19,813,500 கிரயமுடைய 02 இயந்திரங்களைக் கொள்வனவு செய்கையில் வழங்குனருடன் முறையான உடன்படிக்கைகளில் ஈடுபடவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட மிகை ரூபா 37,792,759 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 157,631,149 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகளில் ரூபா 119,838,390 நலிவு அவதானிக்கப்பட்டது. அரசாங்க, வெளிநாட்டு மானியங்களில் ரூபா 28,497,342 குறைவும் செயற்பாட்டுச் செலவினத்தில் ரூபா 105,003,558 அதிகரிப்பும் மேற்படி நலிவுக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளது நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2012 முதல் 2015 வரை தொடர்ச்சியான நிதிப் பெறுபேற்று அதிகரிப்பு ஏற்பட்டபோதும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தை மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் நிறுவகத்தின் பங்களிப்பு 2013 முதல் 2016 வரை முறையே ரூபா 256,417,465,ரூபா 297,593,788 மற்றும் ரூபா 453,446,003 ஆகியதுடன் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டினது பங்களிப்பு 21 சதவீதம் குறைவடைந்திருந்தது.

### 3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நிறுவகத்தின் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தைக் கருத்தில் கொள்கையில் முன்னைய ஆண்டில் 5.4:1 ஆகவிருந்த நடைமுறை விகிதம் மீளாய்வாண்டில் 4.7:1 ஆகியதுடன் துரித சொத்து விகிதம் முன்னைய ஆண்டில் 5.2:1 மற்றும் மீளாய்வாண்டில் 4.3:1 ஆகவிருந்தது. நடைமுறைச் சொத்துக்களில் 82 சதவீதம் திறைசேரிப் பிணை முறியும் வங்கி நடைமுறைக் கணக்கு மீதியுமே ஆவதுடன் நிறுவகத்தின் பெருமளவிலான சொத்துக்கள் திரவவியல் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுமிருந்தன. நிறுவகத்தின் 05 வங்கிக் கணக்குகளில் 02 இல் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 97 மில்லியன் மற்றும் ரூபா 92 மில்லியன் மீதிகளிருந்தன. தேவைக்கதிகமான மீதியை வைத்திருத்தலும், குறுங்கால முதலீடுகளை மேற்கொள்ளுதலும், கையிருப்பு மீதியுள் ரூபா 10 மில்லியனான காலங் கடந்த கையிருப்பு மற்றும் ரூபா 46 மில்லியன் நடைமுறை அல்லாத சொத்துக்கள் நிலவியமையும் காரணமாக நடைமுறை மற்றும் துரித சொத்து விகிதங்கள் அதிகரித்திருந்தன.

## 3.3 நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்று, உடன்படிக்கைகளை மீறிய 04 பேராசிரியர்களுக்கு எதிராக நிறுவகம் ரூபா 8,538,064 இழப்பீடு கோரி நீதிமன்றங்களில் 04 வழக்குகளைத் தொடுத்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், இலங்கையில் கல்வி அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், கல்வி நடைமுறைகளில் செயலாற்றல், நோக்கங்களை வியூகப்படுத்தல் மற்றும் விடய அளவுகளை உடைய கல்வி நடைமுறைகள் தொடர்பாகவும் கல்வி சம்பந்தமான சமுதாய ரீதியிலான, பொருளாதார மற்றும் ஏனைய துறைகள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், கல்வி நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள பதவியணியினரது தொழில்சார் மற்றும் முகாமைத்துவ நிபுணத்துவத்தை அதிகரித்தல், பட்டப்பின் படிப்புக் கல்வியை வழங்குதல் என்பன நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும், அத்திட்டமானது முறைப்படி அமுலாகாமை காரணமாக ஒட்டுமொத்த இலங்கை மாணாக்கரது கல்வி நடவடிக்கைகளும் நேரடியாக பாதிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு

(i) சிங்களம், சமயம், தர்ம சாஸ்திரம், கணிதம் ஆகிய பிரிவுகளினூடாக 04 நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் 1200 ஆசிரியர்களையும் விரிவுரை ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின்போது திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) ஆறு பிரிவுகள் மூலம் அமுலாக்கப்பட்ட 17 நிகழ்ச்சித்திட்டங்களில் 9,000 ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 5,390 பேரே பயிற்றுவிக்கப்பட்டதால் திட்டமிடப்பட்ட எண்ணிக்கையில் 40 சதவீதம் பயிற்றுவிக்கப்படாது எதிர்பார்த்த இலக்கை எய்த முடியவில்லை.

(iii) தமிழ், சமூக விஞ்ஞானம், கணிதம், வணிகம், கலை மற்றும் அந்நிய மொழிகள் மற்றும் இருமொழிப் பிரிவுகள் 05 இன் ஊடாக 18 பாடங்களுக்குரிய ஆசிரியர் கைநூல்களின் முதலாம் வரைவுகள் மாத்திரமே முடிவடைந்திருந்தன. அழகியல், சமயம் மற்றும் தர்ம சாஸ்திரம், சமூக விஞ்ஞானம், கலை மற்றும் அந்நிய மொழிப் பிரிவுகள் 04 இன் மூலம் 12 பாடங்களுக்குரிய ஆசிரியர் கைநூல்களின் இறுதி வரைவுகள் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இக்கைநூல்கள் அங்கீகரிக்கப்பட்டு, அச்சிடப்படுவதற்காக கல்விப் பிரசுரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சிங்களப் பிரிவின் மூலம் 12-13 ஆம் தரங்களுக்கான ஊடக ஆய்வு ஆசிரியர் கைநூல்களும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் 6-8 ஆம் தரங்களுக்கான தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் கைநூல்களும் மீளாய்வாண்டில் தயாரிக்கப்படுவதற்கான திட்டமிருந்த போதும் அதில் நுழைவதற்கேனும் முயற்சித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது சிங்களப் பிரிவால் ரூபா 12,738,410 செலவில் 60 செயலமர்வுகளும் தொழில்நுட்பப் பிரிவால் ரூபா 18,453,549 செலவில் 183 செயலமர்வுகளும் நடாத்தப்பட்டிருந்தன. இச்செயலமர்வுகளில் கணக்காய்வு பரிசோதனைக்கென தெரிவுச் செய்வைக்குள்ளான ஊடகக் கூறுகளை உருவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் எனும் நோக்கங்களுடன் 100 ஆசிரியர்களது பயிற்சிச் செயலமர்வுகளது மூன்றாம் மற்றும் நான்காம் தவணைச் செயலமர்வுகளை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், செயலமர்வுகள் 2016 டிசெம்பர் 06 மற்றும் 07 ஆந் திகதி ஆகிய இரண்டு தினங்களிலும் நடாத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இச்செயலமர்வில் 100 ஆசிரியர்களைப் பங்குபற்றச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டபோதும், பங்குபற்றிய ஆசிரியர்களது எண்ணிக்கை 19 மாத்திரமே.

(ii) ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஆசிரியர்களைப் பங்குபற்றச் செய்வது மாகாண கல்வி அலுவலகங்களினூடாக முறையான நடைமுறைகளுக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெறவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வாழ்க்கைத் திறனாக ஆங்கில அறிவைப் பெருக்கி கொள்வதற்கான செயற்திட்டம் (English as a Life Skill)

வாழ்க்கைத் திறனாக ஆங்கில அறிவைப் பெருக்கிக் கொள்வது 8 ஆம் 9 ஆம் தரங்களில் மேற்கொள்ளப்படுவதற்காக 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தின் கீழ் 50 டிவீடீ நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்கு கல்வி அமைச்சால் ரூபா 4,500,000 நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவகம் ரூபா 1,333,441 செலவில் 8 ஆம் 9 ஆம் தரங்களுக்காக முறையே 15 மற்றும் 9 நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்திருந்தது. அதில் 8 ஆந் தரத்தினது 6 நிகழ்ச்சித் திட்டங்களில் மாத்திரமே இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 9 ஆந் தரத்தினது எந்த நிகழ்ச்சித்திட்டமும் இறுதி முடிவுக்குள்ளாகவில்லை என செயல் முன்னேற்ற அறிக்கை மூலம் அவதானிக்கப்பட்டது.

(ii) 2016 ஆம் ஆண்டு முடிவிலேனும் மேலே குறிப்பிடப்பட்ட செயல் முன்னேற்றத்தை விட நிறுவகமோ அல்லது அமைச்சோ எதிர்பார்த்த நோக்கத்தை செயற்திட்டத்தின் மூலம் அடைய முடியாதிருந்தது. அத்துடன், எஞ்சிய ரூபா 3,166,559 கல்வி அமைச்சுக்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### (ஆ) நெனச கல்வி நிகழ்ச்சித்திட்டம்

2008 சனவரி 17 ஆந் திகதிய அமப/08/0002/316/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், சந்திரிகா தொழில்நுட்பத்தின் வாயிலாகக் கல்வி அலை வரிசை ஒன்றை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டு தொடக்கம் பிரத்தியேக கம்பனி ஒன்றினது நிதி அனுசரனையுடனும் கல்வி அமைச்சினது ஒருங்கிணைப்புடனும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான பாடத்தை அமைக்கும் கடமை நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கும் 2011 ஆம் ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கும் மேற் குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் மூன்றும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில்

கைச்சாத்திட்டிருந்தன. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) 2008 முதல் 2014 வரை பாடத்தயாரிப்பு நிறுவகத்தால் மேற்கொள்ளப்படுவதுடன், 2013 ஆம் ஆண்டின் போது பாட விதானத்தை அடிப்படையாகக் கொண்டு பாடங்களுக்குரிய 990 நிகழ்ச்சித்திட்டங்களும் சிங்கள மொழி மூல பொது மற்றும் குறுகிய நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கலாக 2,115 பூரண நிகழ்ச்சித்திட்டங்களும் தயாரிக்கப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்தது. கம்பனியால் ரூபா 6,318,782 வழங்கப்பட்டபோதும்,நிறுவகம் 104 நிகழ்ச்சித் திட்டங்களை மாத்திரம் தயாரித்திருந்தமையால் கல்வி அமைச்சினால் இவ்வேலையானது தர்மவாஹினி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்குக் கம்பனி ரூபா 1,489,338 பெறுமதியான தயாரிப்பு இயந்திரத்தை 2013 சனவரி 17 ஆந் திகதியன்று நிறுவகத்திற்கு வழங்கியிருந்ததுடன், இந்நிகழ்ச்சித் திட்டம் இடை நடுவே கைவிடப்பட்டமையால் இந்த இயந்திரத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iii) 2015 ஆம் ஆண்டில் ஒளிபரப்பை ஆரம்பிப்பதற்கிருந்த கா.பொ.த(உயர் தரம்) பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பாடங்களுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் தொழில்நுட்ப திரைக் கதைகளை எழுதி 2015 யூன் மாதத்தில் முடிவு செய்வதற்கும் நிறுவகம் திட்டமிட்டிருந்தது. இது தொடர்பாகக் கம்பனி வழங்கியிருந்த தகவல்களின் பிரகாரம் கம்பனி நிறுவகத்திற்கு ரூபா 1,058,800 வழங்கியிருந்தபோதும், தொழில்நுட்பவியல் பாடத் தொடரைத் தயாரித்து வழங்கி இந்நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நிறுவகம் தவறியிருந்தது

(இ) 2012 யூன் 02 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம்,ரூபா 85,794,089 செலவில் நிறுவகத்தால் தெற்காசிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கில் மீபே பிரதேசத்தில் தெற்காசிய ஆசிரியர் பயிற்சி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கல்வி அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனம் (யுனெஸ்கோ) மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு 2012 ஆம் ஆண்டில் செய்து கொண்ட உடன்படிக்கைக்கமைய கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி

நிறுவகம் என்பன செயலாற்ற வேண்டிய நிறுவனங்களாவதுடன் உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின்படி யுனெஸ்கோ நிறுவனம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் இசைந்திருந்தது. 15 ஆம் பிரிவின் பிரகாரம், உடன்படிக்கைக் காலம் 6 ஆண்டுகள் ஆகும். இற்றையளவில் 04 ஆண்டுகள் கழிந்திருந்தபோதும், நிறுவகமானது யுனெஸ்கோ தொழில்நுட்ப உதவியை பெறுவதற்கு மீளாய்வாண்டு வரை தவறியிருந்தது. இதன் காரணமாக நிலையம் நிர்மாணிக்கப்படுவதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை.

(ஈ) நிறுவகமானது ரூபா 78,600,000 பெறுமதியான 7.0958 ஹெக்டேயர் தென்னகெலேவத்தை காணியையும் ரூபா 65,000,000 பெறுமதியான பதுவத்தை (கஹடஹேன) காணியையும் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(உ) 2015 சனவரி 13 முதல் 2016 செப்தெம்பர் 21 வரையான காலப்பகுதியின் போது தேசிய கல்வி நிறுவகத்தின் விற்பனைச் சாலையில் விற்பனைக்கிருந்த ரூபா 2,511,000 பெறுமதியுடைய பிரசுரக் கையிருப்புகள் 10,872 ஆகும். இவற்றின் விற்பனை விலை கணிப்பிடப்பட்டது சரியாக அமைந்ததா என்பது கணக்காய்வில் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

(ஊ) நில அளவைத் திணைக்களமும் தேசிய கல்வி நிறுவகமும் ஒன்றிணைந்து தீவில் உள்ள 4,722 பாடசாலைச் சிறுவர்களுக்கிடையே விநியோகிப்பதற்கென 10,000 தேசிய வரைபடக் கோவைப் பிரதிகளை அச்சிடுவதற்கான கட்டளைகளை அரசாங்க அச்சகத்திடம் 2015 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று வழங்கி, அதன் பொருட்டு 2015 நவம்பர் 09 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்த தொகை ரூபா 2,442,000 ஆகும். எவ்வாறாயினும், 170 பிரதிகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெறவில்லை. இவ்வாறிருக்க 4,775 பிரதிகள் கிடைக்கப்பெற்று 09 மாதங்கள் கழிந்திருந்த நிலையிலும் அவற்றைப் பாடசாலைகளுக்கு இடையே விநியோகிக்காது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அவை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(எ) ஓராண்டு காலத்திற்குப் பணி புரியுமாறு விடுவிக்கப்பட்டிருந்த தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகமும் நிதியும்) பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு 2016 பெப்ரவரி 16 முதல் 2017 ஆகஸ்ட் 15 வரை உதவிப் பணிப்பாளரது அங்கீகாரத்துடன் நிறுவகத்தின் வெளிநாட்டினர் விடுதியில் இடவசதி வழங்கப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 15 ஆந் திகதிய 429 ஆம் இலக்க உள்ளகக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின்

பிரகாரம், வெளிநாட்டினர் விடுதியின் அறையொன்றிற்கு நாளாந்தம் 1,500 விடுதிக் கட்டணம் அறவிடப்படவேண்டுமாயினும், மாதமொன்றிற்கு ரூபா 1,500 வீதமாக ரூபா 26,922 மாத்திரமே மீளாய்வாண்டு முடிவு வரை அறவிடப்பட்டிருந்தது. மேலும், அவரிடமிருந்து நீர், மின்சாரக் கட்டணம், எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிறுவகத்தின் வளாகத்திலும் மீபேயில் உள்ள ஆசிரியர் நிலைய வளாகத்திலும் அமைந்துள்ள 12 உத்தியோகபூர்வ மனைகளுக்கு வெவ்வேறு நீர் மானிகள் பொருத்தப்பட்டிராமையால், அங்குள்ள உத்தியோகத்தர் எவரிடமிருந்தும் நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வுத்தியோகபூர்வ மனைகள் அடங்கலாக ஒட்டு மொத்த நிறுவகத்தின் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,210,384 மற்றும் 2016 சனவரி முதல் டிசெம்பர் வரை ரூபா 3,036,711 என ரூபா 4,405,128 கூட்டுத் தொகை நீர்க் கட்டணமாக நிறுவகத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) தேவைகளை இனங்கண்டு, அதற்கேற்ப கொள்வனவுகளை மேற்கொள்ளாததால் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 2,430,180 பெறுமதியுடைய 90 விரிவுரை மண்டப நாற்காலிகளும் 90 மேசைகளும் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றை வைப்பதற்கு இடம் அமைத்துக் கொடுப்பதற்காக நல்ல நிலையில் இருந்த 213 நாற்காலிகளையும் 228 மேசைகளையும் ஒவ்வொரு பிரிவிலும் விசாரித்தறிந்து 12 பிரிவுகளுக்கிடையே அவை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஒ) நிறுவகத்தின் கடன்பட்டோரிடமிருந்து அறவீடுகளை மேற்கொள்வது நிச்சயமற்றதாகும்போது கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு மற்றும் கடன் அறவீடு என்பன மீளாய்வு செய்யப்பட்டு நட்டக் கடனுக்கான நிதியேற்பாட்டுத் தொகையைத் தீர்மானிக்க வேண்டுமாயினும், அவ்வாறல்லாது 2011 முதல் 2016 வரை ஒரேயளவான தொகையான ரூபா 22,169 நட்டக் கடனுக்கான நிதியேற்பாடாக அமைந்திருந்தது.

## 4.3 நிதியப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவு செய்யப்பட்ட கா.பொ.த (உயர் தரம்) பாடங்களுக்கான 06 வளங்களுக்கான தோற்றுவாய் புத்தகங்களைத் தயாரித்து அச்சிடுவதற்கு 2014 ஆம் ஆண்டின்போது அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் வெளிவிகார நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் திணைக்களத்தின் உதவியாக (DFAT / AUSAID)

ரூபா 15,400,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு 03 ஆண்டுகள் நிறைவடைந்திருந்த போதும், அப்புத்தக அச்சீடு நிறைவேறாமையால் மீளாய்வாண்டு முடிவு வரை அந் நிதி பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 67,734,282 மீதியுடன் கடன் நிதியம் என அழைக்கப்படும் நிதியம் ஒன்று பேணப்படுவதுடன், அதற்கான நோக்கத்தைக் கணக்காய்வில் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறாயினும், அந்நிதியத்தின் மூலம் கடன் வழங்கப்படவோ அல்லது வேறு பணிகளின் பொருட்டோ அது பயன்படுத்தப்படாது இடர்க் கடனுக்கான வட்டியை அதில் செலவு வைத்தவாறு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 8,750,000 ஆகும். எவ்வாறாயினும், 2016 டிசெம்பர் 31 வரை இந்நிதியம் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஈ) நோக்கத்திற்கான பணிகளுக்குப் பயன்படுத்தப்படாது நிறுவகத்தின் 03 நடைமுறைக் கணக்குகள் மீளாய்வாண்டில் ரூபா 41,086,056 முதல் ரூபா 90,418,980 வரையான தேவைக்கு அப்பாற்பட்ட மீதியைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலத்திரனியல் பிரசாரப் பிரிவால் பல்வேறு தலைப்புகளின் கீழ் 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் 90 வீடியோ நிகழ்ச்சித் திட்டங்களும் 2016 ஆம் ஆண்டின் போது 31 நிகழ்ச்சித் திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவ்வுற்பத்திகளது சிறப்புத் தன்மையைப் பரிசீலித்து அவ்வுற்பத்திகளின் மூலம் கல்வித்துறைக்குப் பலனளிக்கும் நன்மைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட ரூபா 775,375 பெறுமதியான 6,203 கெசட் நாடாக்கள், பல்வேறு தலைப்புகளின் கீழ் அழகியல் மற்றும் ஏனைய திணைக்களங்கள் தயாரித்த ரூபா 786,000

பெறுமதியான 4,798 கெசட் தட்டுகள் என்பன 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்பனையாகாது ஏறக்குறைய 05 ஆண்டுகளாக விற்பனைக் கூடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 4.5 தாமதமாகிய செயற்திட்டங்கள்

2008 ஆம் ஆண்டின்போது நிறுவகத்தின் மூன்று மாடி விடுதியில் மதிப்பிடப்பட்ட கிரயமாகிய ரூபா 27,848,100 தொகையில் கழிவறைகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தையும் மதிப்பீட்டையும் தயாரிப்பதற்கு மதியுரைக் கட்டணமாக ஒப்பந்தப் பெறுமதியின் 05 சதவீதம், அதாவது, ரூபா 1,200,949 கொடுப்பனவு செய்யப்பட்டு 09 ஆண்டுகள் கழிந்தும் அந்நிர்மாண வேலை நடவடிக்கைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தன.

## 4.6 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 டிசெம்பர் 21 ஆந் திகதிய DMS/B1/37/3/Vol III எனும் இலக்கமுடைய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம், நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 652 ஆகும். உள்ளவாறான பதவியணி 433 ஆகும். 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 213 பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. நிறுவகத்தின் பதவிகளுக்கான வெற்றிடங்களில் 124 உயர் முகாமைத்துவப் பதவிகள் ஆகியமையாலும் அவற்றுள் 104 விரிவுரையாளர்களுக்கு உரித்தானதாலும் மாணாக்கருக்குச் சிறப்பான கல்வியை வழங்குவதற்கான கடமைகளின் போது பாடவிதான அபிவிருத்தி, ஆசிரியர்களுக்கான கைநூல்களைத் தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகளின் பொருட்டு தேசிய கல்வி நிறுவகத்தின் பொறுப்பு முறையாக நிறைவேற்றப்படுவதற்கான ஆற்றல் சரியானவாறு நிறைவேற்றப்படுகின்றதா என்பது கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக விளங்கியது.

(ஆ) வெற்றிடமாக உள்ள 18 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கும் 2016 மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மேலதிகப் பணிப்பாளர் நாயகப் பதவியின் வெற்றிடமும் மேலதிக பிரதிப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர், சிரேஷ்ட மற்றும் உதவிப் பேராசிரியர் பதவிகளில் வெற்றிடங்களும் நிரப்பப்படுவதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் 2015 மார்ச் மாதத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அதன் பொருட்டு ரூபா 399,599 செலவிடப்பட்டு நிறுவகத்தால் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் புதினப் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதும், அப்பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு முடிவிலும் நிறுவகத்தால் இயலாது போனது.

(இ) நிறுவகத்தில் உள்ள 04 பிரதிப் பணிப்பாளர் நாயகப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் மற்றும் 14 பணிப்பாளர் பதவிகள் என்பவற்றிற்கு விடுவித்தல் அடிப்படையிலும் இணைக்கப்படும் அடிப்படையிலும் தற்காலிகமாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், விடுவித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,061,558 படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் 09 பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும், பணிப்பாளர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்குப் பதிலாக 2015, 2016 ஆம் ஆண்டுகளின்போது பதில் நியமனங்கள் வழங்கப்பட்டு அதற்கான படியாக மீளாய்வாண்டின்போது ரூபா 1,181,972 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் முடிவிலும் 41 உதவி விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவியவாறிருந்தன. அவற்றை நிரப்பவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது சமயாசமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உதவி விரிவுரையாளர்களுக்கு 2011 முதல் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை ரூபா 4,048,175 படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) 1993 மார்ச் 01 ஆந் திகதியன்று செயற்திட்ட உத்தியோகத்தராகச் சேவையில் இணைந்த பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மாற்றுக் கல்வி) பல சந்தர்ப்பங்களில் வேலைக்குச் சமூகமளிக்காதும் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றும் இருந்தமை சம்பந்தமாக பல்வேறு எச்சரிக்கைகளுக்குள்ளாகியிருந்தார். இந்த உத்தியோகத்தரது பெயர் வழிக் கோவையின் பிரகாரம், 2010 ஆம் ஆண்டிலும் 2012 முதல் 2015 ஆம் ஆண்டுகளின் போதும் 168 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவளவிலும் அதற்குரிய அறவீடுகள் மேற்கொள்ளப்படாதுமிருந்தன.

(எ) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசியக் கல்வி நிறுவக அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் தாபனப் பிரிவின் வேண்டுகோளின் பேரில் அரச சேவையில் உள்ள எந்தவொரு உத்தியோகத்தரேனும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரது இணக்கத்துடன் குறித்த அமைச்சினது

செயலாளரது விருப்புடன் குறித்தவொரு காலப் பகுதிக்கோ அல்லது நிரந்தரமாகவோ நிறுவகத்தில் நியமிக்கப்பட முடியுமெனினும், விடுவித்தல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விடயத்தில் அவ்வாறாக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பொருட் கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 47,135,565 பெறுமதியான 2,311 பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்ட போதும், அந்த அளவின் 55 சதவீதமான 1,278 பொருட்கள் ரூபா 41,283,407 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கென நிறுவகம் தயாரித்திருந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தை அமுலாக்குகையில் திட்டமிடப்பட்ட 753 பொருட்களுக்குப் பதிலாக 845 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன்போது திட்டமிடப்பட்ட அளவிற்கும் அதிகமாக 136 பொருட்கள் குறைவாகவும் 228 பொருட்கள் அதிகளவிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், பொருட் கொள்வனவுத் திட்டம் சரியான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 ஆம் ஆண்டினது மதிப்பிடப்பட்ட மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினம் என்பன உள்ளவாறான பெறுமதியுடன் ஒப்பிடப்படுகையில் 15 முதல் 76 சதவீதமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2009 யூன் 01 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையினது (i) மற்றும் (ii) என்பவற்றின் பிரகாரம் நிறுவகத்தின் நிறைவேற்று தரத்தினர் தவிர ஏனைய உத்தியோகத்தர்களது சம்பள மாற்றக் கணிப்புகளின் போது 29 உத்தியோகத்தர்களுக்கு 2009 சனவரி 01 முதல் 2014 ஏப்ரல் 30 வரை

ரூபா 1,209,220 கூடுதல் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 156,684 அனுப்பிவைக்கப்பட்டமை முன்னைய ஆண்டினது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதும், ஆண்டின் இறுதியளவிலும் பொருத்தமான நடவடிக்கைகள் அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை |
| | (ii) பொருட் கொள்வனவிற்கான கட்டளைகளை வழங்கும்போது பெறப்பட்ட பொருட்கள் நிலையான சொத்துக்களாக இணங்காணப்பட்டிருக்காமை. |
| | (iii) சொத்துக்களும் பொறுப்புகளும் சரிவர இனங்காணப்பட்டுக் கணக்கிலிடப்படாமை |
| | (iv) கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினத்தின் பொருட்டுச் சரியான பாதீட்டைத் தயாரிக்காமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமை மற்றும் பாதீட்டிற்கு அப்பால் செலவுகள் மேற்கொள்ளப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| (இ) | கையிருப்புக் கட்டுப்பாடு | காலங்கடந்த, பயன்படுத்தப்பட முடியாத கையிருப்புகள் சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையும் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்படாமையும். |
| (ஈ) | பொருட் கொள்வனவு நடைமுறை | பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை |
| (உ) | சொத்து முகாமைத்துவம் | நிறுவனத்திற்குரிய காணி, வாகனங்கள் என்பன முறைப்படி சுவீகரிக்கப்படாமை, சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்படல், பயனுள்ளவாறு பயன்படுத்தப்படாமை என்பன. |
| (ஊ) | பதவியணி நிர்வாகம் | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்கு உத்தியோகத்தர்களை நியமித்தல் நெடுங்காலமாகத் தொடர்வது மற்றும் தற்காலிகமாக விடுவித்தல் அடிப்படையிலும் சேவை இணைப்பு அடிப்படையிலும் உத்தியோகத்தர்களை நியமித்தல் |
| (எ) | தொலைக்காட்சிக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல் | நெனச கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து ஒளிபரப்பாமை. |
| (ஏ) | விடுதி நிர்வாகம் | குறைவாகப் பயன்படுத்தப்படும் விடுதிகளை பயனுள்ளவாறு பயன்படுத்துதல், முறைப்படி பராமரிக்கப்படாமை மற்றும் விடுதிக் குழுக்களது கூட்டங்களை நடத்தாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## தேசிய கல்வி நிறுவகத்தின் 2016 – மார்கழி 31ம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 14 (2) (C) பந்தியிலுள்ளபடி கணக்காய்வாளரின் அறிக்கை.

**தெளிவுபடுத்தல்.**

**2.2 அடிப்படை விடயங்களின் வெளியீடுகள் பற்றிய கருத்துத் தெரிவித்தல்.**

**2.2.1 இலங்கை அரச கணக்கியல் முன்னேற்றம்.**

**(அ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 06**

2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு விபரங்கள் திருத்தம் செய்வதற்காக நிதிப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) இலங்கை அரச கணக்கியல் நியமம் 07**

நிதியமைச்சின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் சுற்றுநிருப இலக்கம் 1 /2017 சுற்றுநிருபத்தின் ஊடாகக் கேட்கப்பட்டுள்ள விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக நிரந்தரச் சொத்துக்களுக்குரிய விபரங்களை இற்றைப்படுத்தப் படுவதோடு, அந்த விபரங்களினை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர சொத்துக் களுக்குரிய அறிக்கையும் இற்றைப்படுத்தப்படும். இதற்காகக் களஞ்சியசாலை விபரங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, தற்போது வாகனங்களுக்காகத் தேவைப்படும் விபரங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. இயந்திர உபகரணங்களின் விபரங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த விபரங்களின் பட்டியல் முழுமையாக்குவதற்காக 2018 புரட்டாதி 30ம் திகதியின் போது சொத்துக்களின் வெளியீடுகள் நிறைவு செய்ய்ப்படும்.

**(இ) இலங்கை அரச கணக்கியல் நியமம் 09**

2017 ஆம் கணக்காண்டின் புத்தகக் களஞ்சியசாலையில் இருப்பு கணக்கெடுக்கப் பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கை**

2017 ஆம் ஆண்டில் இது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) (I), (II), (III), (IV)
கணக்காய்வு அறிக்கையில் காணக்கூடிய குறைபாடுகள், நிதிக் கூற்றுக்களில் ஒப்பீட்டு பெறுமதிகளின் கீழ்க் காட்டுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் கணக்குகளில் திருத்தப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(இ) ரூபா. 10,369,094/= பெறுமதியான ஆசிரிய வழிகாட்டல்களை அகற்றுவதற்காக பேரவையின் அனுமதி 2017 மாசி மாதம் கிடைக்கப் பெற்றுள்ளதோடு அதற்கான நிறைவேற்றும் குழுவை அமைத்து விடயத்தை முடிக்கப் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திடம் (நிர்வாக, நிதிகள் சேவை) வழங்கப்பட்டுள்ளது. இதுகாலவரை நிறைவேற்றும் குழுவை நியமித்துப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2017ஆம் ஆண்டின் கணக்குகளின் திருத்தம் செய்ய ஒழுங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(உ) எதிர்காலத்தில் இவ்வாறான காலதாமதம் ஏற்படாமலிருக்கும்படி உரிய பதிவுப் புத்தகங்களைப் பேணுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டு கணக்குகளில் இவை திருத்தம் செய்யப்படும்.

(ஊ) உரிய சேவையாளர்களை சேவையிலிருந்து விலக்கும் கடிதத்தை நிருவாகத் துறையினால் நிதிப்பிரிவிற்கு கிடைக்கச் செய்யாமலிருப்பதன் காரணத்தினால் இந்த நபர்களின் வெகுமதியை ஒதுக்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி உரிய விபரங்கள் நிதிப்பிரிவிற்கு வழங்குவதற்கு நிர்வாகத் துறைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 2017 ம் ஆண்டு இறுதிக் கணக்குகளில் தேவையான பொருத்தப்பாட்டினை ஏற்படுத்த நிதிப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(எ) இடருதவிக்கடன் வழங்குவது இந்த நிதி ஒதுக்கீட்டின் ஊடாகவேயாகும். ஆகையால் வட்டியானது இந்த நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டு கணக்காண்டின் இந்த வருமானம் பொருத்தப்பாடாக்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளளது.

**2.2.4 தெளிவற்ற மாற்றங்கள்**

(அ) முற்பணக் கணக்கில் சமப்படுத்தல் செய்யும் போது தாமதமாகுதல் உப பட்டியல்களில் குறிக்கப்படாவிடில் இறுதிக் கணக்குகளில் குறிப்பிட்ட மீதியைச் சரிப்படுத்தி 2017ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. (இணைப்பு - 01)

(ஆ) பயிற்சி நெறிக்குரிய கட்டணமாகக் கிடைக்கப்பெற்ற பணத்தில் சதவீதமாக எதிர்காலத்தில் செலுத்தப்படும் பயிற்சி நெறிக் கட்டணமாக கணக்கில் குறிக்கப்பட்டுள்ளதோடு ஆசிரிய கல்வித் துறையின் நிதிப்பிரிவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படாதபடியால் இவ்வாறு இடம் பெற்றுள்ளது. இந்தக் குறை திருத்தம் செய்யப்படும்.

**2.3 கிடைக்கப் பெறவுள்ளதும் செலுத்தப்பட வேண்டியதுமான கணக்கு**

(அ) கல்வியமைச்சில் கிடைக்க வேண்டிய ரூ. 3237.800/= தொகை பற்றிய 2016-12-27ம் திகதி கல்வியமைச்சில் நடத்தப்பட்ட கணக்காய்வும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமாக மீண்டும் காரணங்கள் கலந்துரையாடப் படும். அதில் இவ்விடயத்திற்கரிய ஆணை (கட்டளை)யினை முன்வைக்குமாறு கல்வியமைச்சின் பிரதம நிதி அதிகாரி மூலம் தேசிய கல்வி நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஆணையில்லாததால் இந்தத்தொகை பதிவளிக்கப்பட இணங்கியபடியால் மீண்டும் கல்வி அமைச்சிடம் விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வியமைச்சின் பல்வேறு கணக்குகளுக்கு விபரம் முன்வைக்கப்பட்டுள்ளது. 2017-12-21ஆம் திகதி கூட்டப்பட்ட நிறுவன பேரவை மூலம் இத்தொகை பதிவளிக்கப்படுவதற்கு மீண்டும் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வு விசாரணைகளின்படி இந்தப் பணத்தொகை கீழ்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | **மொத்தப் பெறுமதி** | **5 வருடத்திற்குட்பட்ட மீதிப் பெறுமதி** |
|---|---|---|
| கேள்வி வைப்பு | ரூ.444,425.00 | 98,850, 00 |
| நிறுத்திவைத்த வைப்பு | ரூ.3,413,320.00 | 25963.00 |
| மீண்டும் செலுத்த வேண்டியவை | ரூ.170,825.00 | 18025.00 |
| அனுசரணை | 148458.00 | 148,227.00 |
| கொள்முதல் பிணை | ரூ.1083955.00 | 77230.00 |
| மொத்தம் | ரூ.5260983.00 | 368295.00 |

இங்கு கொடுக்கப்பட வேண்டிய செலவுகளுக்காக உரிய நபரின் வேண்டுகோள் கிடைக்காதபடியால் மீதி காணப்படுகிறது. 2017 கணக்காண்டில் இதனைச் சரிசெய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ரூ. 595,122 தொகை கீழ்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பொது முற்பணம் | ரூ.88,733.00 |
| கடன் பெற்றோர் | ரூ.506,389.00 |
| மொத்தம் | ரூ.595.122.00 |

கடன் பெற்ற மீதி கீழ்வருமாறு

| | |
|---|---|
| B.R.M. தயானந்த | ரூ.112,889.00 |
| தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் | ரூ.318,500.00 |
| மரண சகாயச் சங்கம் (தே. க. நி) | ரூ.75,000.00 |
| மொத்தம் | ரூ.506.389.00 |

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூ. 318,500/= இற்கான பணத்தொகையில் ரூ. 10560.00 இனை தேசிய கல்வி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மீதிப்பணம் ரூ. 307,940/= இனை செலுத்துவதற்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

B. R. M. தயானந்த அவர்களின் கணக்கில் தவணை அடிப்படையில் செலுத்தல் நடைபெறும் என்று மேலும் ரூ. 88,889.70 இனை செலுத்துவதற்கு உறுதிப்படுத்தப்பட்டது.

**2.4 சட்டதிட்டங்களுக்கும், முகாமைத்துவ தீர்மானங்களுக்கும் கட்டுப்படாமை**

(அ) **தாபனக்கோவை II ஆம் பிரிவில் 13. 1. 2 ஆம் பந்தி**

பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆசிரிய கல்வி மற்றும் மாற்றுக்கல்வி) பதவிக்கான உத்தியோகத்தர் ஆட்சேர்த்தலுக்கு 2017-06-12ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி விண்ணப்பப்படிவம் II கிடைக்கப் பெற்றுள்ளதோடு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளது.

**2006 அரச கொள்முதல் வழிகாட்டியின் 8.9.1 (ஆ) பந்தி:** அரச கொள்முதல் வழிகாட்டலின்படி முறையான உடன்படிக்கைகளுக்கு வழங்கும் தாமதத்தினைத் தவிர்ப்பதற்கு, வழங்குனர்கள் அறிவித்தல் செய்வதற்கு நிதிப்பிரிவின் உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு (நிர்வாக, நிதி மற்றும் துணைச் சேவைகள்) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு உரிய முறைப்படி சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**3. நிதிமீளாய்வுகள்**

**3.1 நிதிப் பெறுபேறு**
**ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**3.2 நிலையான செயற்பாட்டு முகாமைத்துவம்**
**ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**3.3 நிறுவனத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட நாளாந்தச் செயற்பாடுகள்**

(அ) திருமதி. S. A. M. S.N. செனவிரத்ன
இந்த உத்தியோகத்தருக்கு எதிராகக் கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தின் கீழ் இல 4801 / 05/ M வழக்குத் தொடுக்கப்படுள்ளது.
இந்த வழக்கின் பிரதிவாதி நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதால் அழைப்பாணை யைப் பொறுப்பளிக்க முடியாதுள்ளது. ஆகையால் வழக்கு பிற்போடப்பட்டுள்ளது.

**A. P. S பதிரண - 7018 / 05/ M வழக்கு – கல்கிசை மாவட்ட நீதிமன்றம்**
இந்த வழக்கு 2017-08-11ஆம் திகதி முடிவடைந்துவிட்டது. வழக்குத் தீர்ப்பு வெளிப்படுத்துவதற்கு முன்னர் பிரதிவாதியின் மூலம் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூ. 4056,527/ 63 பணத்தொகையில் முறைப்படி ரூ. 4000.000/= இனை காசோலை இல 002668 ஊடாக ரூ.56,527/= பணத்தொகை காசோலை இல 002670 எனும் காசோலை ஊடாகத் தேசிய கல்வி நிறுவகத்தின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. (இணைப்பு-02)

**திருமதி. K. W. P. A. வீரவர்தன 2320 / 16/ M இலக்க வழக்கு – நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில்** இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அடுத்த வழக்கின் அமர்வு 2018-01-30ஆம் திகதி நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**செல்வி. B. K. விஜேகுணவர்தன**
**நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில்** இந்த வழக்குத் தெர்டுக்கப்பட்டுள்ளது. வழக்கு இல 2706/17M இவ்வழக்கு இதுவரைக்கும் விசாரணைக்கு அழைக்கப்பட வில்லை.

4. **வழிநடத்துகை மீளாய்வு**

4.1 **செயலடைவு**

(அ) (I) , (II) 2016 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட (I), (II) இன் கீழ் உள்ள விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு அழைக்கப்பட்டவர்கள் மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக பயிற்சிகள் இடம்பெற்றதால் பயிற்சியாளர்கள் வரவு குறைவது பற்றி தேசிய கல்வி நிறுவகத்தினால் கட்டுப்படுத்தப்பட முடியாது.

(III) 1ஆம் வரைவுகள் தயாரிக்கப்பட்ட துறைகள் 05 இன் தற்போதைய நிலைமை

- **தமிழ் மொழித் துறை**

தரம் 13 இன் ஆசிரிய வழிகாட்டிகள் தயாரித்தல். கல்வியலுவல்கள் சபையிடம் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு 2017-12-13ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

- **சமூக விஞ்ஞானத் துறை**

**புவியியல் - தரம் - 9**

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களுக்காக நிறுவனப் பேரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அச்சுப்பதிப்பித்தலுக்காக கல்வி வெளயீட்டுத் திணைக் களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**புவியியல் - தரம் - 13**

சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களின் ஆசிரிய வழிகாட்டிகளின் கல்வியலுவல்கள் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. 2017 டிசம்பரில் நிறுவன பேரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. சிங்கள மொழி மூல ஆசிரிய வழிகாட்டி 2017-12-29ஆம் திகதியும் தமிழ் மொழி மூல ஆசிரிய வழிகாட்டி 2018-01-05ஆம் திகதியும் கல்வி வெளியீட்டுத் திறணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழி மூல வழிகாட்டல் 2018-01-09ஆம் திகதி நடந்த கூட்டத்தில் கல்வியலுவல்கள் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**9 ஆம் 13 ஆம் தரங்களுக்கான வரலாறு ஆசிரிய வழிகாட்டி தயாரித்தல்**

தரம் 9 ஆம் தர வரலாறு சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய வழிகாட்டிகள் கல்வியலுவல்கள் சபையிடம் முன்வைக்கப்பட்டு சிபாரிசு பெறப்பட்டு அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரம் 13 இன் வரலாறு சிங்கள மொழி மூலமும், தமிழ் மொழி மூலமும் 2018-01-09ஆம் திகதி நடைபெற்ற கல்வியலுவல்கள் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் மாற்றங்கள் சிலவற்றைச் செய்யும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**குடியுரிமைக் கல்வி – தரம் – 9**

சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்குமான ஆசிரிய வழிகாட்டிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அச்சிடுதல் நிறைவடைந்துள்ளது.

**அரசியல் விஞ்ஞானம் – தரம் – 12**

சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பிரதிகளுக்கு கல்வியலுவல்கள் சபையின் அனுமதியும் நிறுவன பேரவையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அச்சிடுவதற்காகத் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**அளவையியலும் விஞ்ஞான முறைமையும் – தரம் 13**

சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரிய வழிகாட்டிகளுக்கு, கல்வியலுவல்கள் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றதோடு நிறுவன பேரவையின் அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது.

**அளவையியலும் விஞ்ஞான முறையும் – தரம் – 12**

சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரிய வழிகாட்டிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு 2017-06-12ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

**கணிதத் துறை**

**தரம் 13 இணைந்த கணிதம் ஆசிரியர் வழிகாட்டியினைத் தயார் செய்தல்**

கல்வியலுவல்கள் சபையின் தீர்மானத்தின்படி இணைந்த கணிதம் 12/13 பாடத்திட்டத்தினை மீண்டும் 10 பேர் கொண்ட குழுவிற்கு முன்வைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அந்தக் குழுவின் தீர்மானத்தின்படி மீளவும் கல்வியலுவல்கள் சபையிடம்

முன்வைக்கப்படவும் சிபார்சு பெறப்படவும் நிறுவனப் பேரவையிடம்  முன்வகைக்கப்படவும் அனுமதி பெறத் தாமதமாகியுள்ளது.
தரம் 13 இணைந்த கணிதம் ஆங்கில மொழி மூல ஆசிரிய வழிகாட்டிக்கான கல்வியலுவல்கள் சபையின் அனுமதி 2018-01-09 ஆந் திகதி கிடைத்துள்ளது.

- **வணிகத் துறை**

**தரம் 13 கணக்கீட்டுப் பாடத்திற்கான ஆசிரிய வழிகாட்டியினைத் தயாரித்தல்**

கல்வியலுவல்கள் சபையின் தீர்மானத்தின்படி 12/13 இற்கான பாடத்திட்டம் மீண்டும் 10 பேர் கொண்ட குழுவின் தீர்மானத்துடன் கல்வியலுவல்கள் சபையினரிடம் முன்வைக்கப்பட்டு சிபாரிசுடன் நிறுவனப் பேரவையிடம் சமர்ப்பித்து அனுமதி பெறுவதற்கு காலதாமதமாகியுள்ளது.

இப்போதைக்கு கணக்கீட்டு தரம் 13 ஆசிரிய வழிகாட்டியின் வரைவு நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு 10 பேர் கொண்ட மீளாய்வுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. பரிந்துரையுடன் உடனடியாக கல்வியலுவல்கள் சபையிடம் முன்வைக்கப் பட்டுள்ளது.

- **12 ஆம் தரத்திற்கான வணிகப் புள்ளிவிபரவியலுக்கான ஆசிரிய வழிகாட்டியினைத் தயாரித்தல்**

- **13ஆம் தரத்திற்கான வணிகக் கல்விப் பாடத்திற்கான ஆசிரிய வழிகாட்டியினைத் தயாரித்தல்.**

- **13ஆம் தரத்திற்கான பொருளியல் பாடத்திட்டத்திற்கான ஆசிரிய வழிகாட்டியினைத் தயாரித்தல்**

இப்போதைக்குப் பாடத்திட்டம் தரம் 13 இற்கு ஆசிரிய வழிகாட்டி தயாாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருப்பதுடன் 10 பேரைக் கொண்ட மீளாய்வுக் குழுவிடம் சிபாரிசுடன் உடனடியாக கல்வியலுவல்கள் சபையிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்வியலுவலகச் சபையின் தீர்மானத்தின்படி மேற்குறித்த பாடங்கள் மூன்றிற்குமுரிய 12/13 பாடத்திட்டங்களை 10 பேரைக் கொண்ட மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. அவர்களின் தீர்மானத்துடன் மீளவும் கல்வியலுவலகச் சபையிடம் முன்வைக்கப்பட்டு சிபார்சுடன் நிறுவனப் பேரவையிடம் முன்வைத்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளக் காலதாமதமாகியுள்ளது.

■ **பாரம்பரிய மொழிகள், பிறநாட்டு மொழி மற்றும் இருமொழித் துறை**

**12ஆம் தர ஜப்பான் மொழிக்கான ஆசிரிய வழிகாட்டியைத் தயாரித்தல்**

இந்தப் பாடங்களுக்காக இருக்கும் வளவாளர்களின், எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் தாமதங்கள் ஏற்படுகின்றன. ஆசிரிய வழிகாட்டியைத் தயார் செய்து உரிய அனுமதி பெற்று இப்போதைக்கு அச்சிடுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தரம் 13 இன் ஜப்பான், சீன, ரஷ்யா, மொழிகளுக்கான ஆசிரியர் வழிகாட்டியினைத் தயார் செய்தல்.**

12, 13ஆம் வகுப்புகளுக்குரிய மேல்வரும் பாடங்களின் பாடத்திட்டம் மீள்பரிசீலனைக் குழுவிடம் முன்வைக்கப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்பட்டதால் கல்வியலுவல்கள் சபையின் சிபாரிசு மற்றும் நிறுவன சபையின் அனுமதி பெறுவதில் தாமதாமாகியுள்ளது.

பாடத்திட்டத்தின் அனுமதி கிடைக்கும் வரை ஆசிரியர் வழிகாட்டியை எழுத ஆரம்பிக்க முடியாததாகையால் எழுதுவதில் தாமதம் ஏற்பட்டது தற்போது ஜப்பான், சீன, ரஷ்ய மொழிப் புத்தகத்திற்கான நிறுவன பேரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பபப்பட்டுள்ளது.

**இறுதி வரைவு தயாரிக்கப்பட்ட நான்கு துறைகளின் தற்போதைய நிலைமை**

■ **அழகியற் துறை**

**கர்நாடக சங்கீதம், சித்திரம், மேலைத்தேய சங்கீதம், நாடகமும் அரங்கியலும், நடனம்.**

தரம் 9 ஆசிரியர் வழிகாட்டி அச்சிடப்பட்டுள்ளது.

தரம் 13 ஆசிரியர் வழிகாட்டி அச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**பரத நாட்டியம்**

தரம் 9, மற்றும் 13க்கான ஆசிரிய வழிகாட்டி அச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மேலைத்தேய சங்கீதம்**

தரம் 9 ஆசிரிய வழிகாட்டி அச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

■ **சமயங்கள் விழுமியங்கள் துறை**

**தரம் 13 இஸ்லாம், மற்றும் இஸ்லாமிய நாகரிகத்திற்கான அசிரியர் வழிகாட்டல் தயார் செய்தல்.**

இந்த ஆசிரிய வழிகாட்டி கல்வியலுவல்கள் சபையின் சிபாரிசுவிற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. சிபார்சினைப் பெற்றுத் கல்வி வெளியீட்டுத திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தரம் 13 அரபு பாடத்திற்கான ஆசிரியர் வழிகாட்டியைத் தயார் செய்தல்.**

இந்த ஆசிரிய வழிகாட்டியின் கல்வி அலுவல்கள் சபையின் சிபாரிசிற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது சிபாரிசு பெறப்பட்டுத் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **சமூக விஞ்ஞானத் துறை**

**புவியியல் – தரம் 12**
சிங்கள மொழியின் மூலப் பிரதிகள் 2017-06-28 ஆம் திகதியிலும் தமிழ் மொழி மூலப் பிரதிகள் 2017-07-06 ஆம் திகதியிலும் ஆங்கில மொழி மூலம் 2017-12-06 ஆம் திகதியிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பபப்பட்டுள்ளது.

**வரலாறு – 12ஆம் தரம்**
சிங்கள மொழி மூலம் 2017 -07- 20 ஆம் திகதியிலும் தமிழ் மொழி மூலம் 2017-11-23ஆம் திகதியிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. வரலாற்றுப் பாடம் ஆங்கில மொழி மூலம் தயாரிக்கப்படவில்லை.

**அரசியல் விஞ்ஞானம் – தரம் 13**
சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரிய வழிகாட்டிகளுக்கு நவம்பர் மாதம் கல்வி அலுவல்கள் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. நிறுவனப் பேரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

- **பாரம்பரிய மொழிகள், பிறமொழி மற்றும் இருமொழித் துறை**

தரம் 13 ஜேர்மன், ஹிந்தி, பாளி, சமஸ்கிருத மொழிக்கான ஆசிரிய வழிகாட்டிகளைத் தயார் செய்தல்.

12, 13ஆம் தரங்களுக்குரிய மேல்வரும் பாடங்களுக்கான பாடத்திட்டம், மீளாய்வுக் குழுவிடம் முன்வைக்க உள்ளதாகையால் கல்வி அலுவலகள் சபையின் சிபாரிசு, மற்றும் நிறுவனப் பேரவையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளத் தாமதமாகி யுள்ளது. பாடத்திட்டத்திற்கான அனுமதி கிடைக்கும் வரை ஆசிரிய வழிகாட்டியினை எழுத முடியாதுள்ளதோடு இப்போதைக்கு பாளி, மற்றும் சமஸ்கிருத மொழிகளுக்கு உரிய ஆசிரிய வழிகாட்டியை அச்சிடுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜேர்மன், ஹிந்தி மொழி புத்தகங்களுக்காக நிறுவனப் பேரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அவைகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **சிங்கள மொழித் துறை**

**தொடர்பாடல் ஊடகக்கல்வி – 12மற்றும் 13ஆம் தரங்கள்**

சிங்கள மொழித் துறையினூடாக 12 மற்றும் 13ஆம் தரங்களின் இந்தப் பாடத்திட்டத்தை தயார் செய்ய 12ஆம் தர ஆசிரிய வழிகாட்டி கல்வி அலுவல்கள் சபையினரிடம் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருந்த போதும் 2017-11-29ஆம் திகதி தேசிய கல்வி நிறுவகத்தின் 420ஆம் நிறுவன பேரவைக் கூட்டத்தில் இந்தப்பாடத்திட்டத்தின் அமுலாக்கத்தில், ஆசிரிய வழிகாட்டியை நடைமுறைப்படுத்தல் 1 வருடத்திற்கு ஒத்தி வைக்கத் தீரமானிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2018ஆம் ஆண்டு 12-13ஆம் தரங்களிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு இந்தப் பாடத்திட்டம் 2019ஆம் ஆண்டு க. பொ. த (உ/த) இற்காக தோற்றும் மாணவருக்காக அமுலாக்கப்படவுள்ளது.

**6 மற்றும் 9ஆம் தரத்திற்கான ஆசிரிய வழிகாட்டியினைத் தயாரித்தல்.**

6 மற்றும் 9ஆம் தரங்களுக்கான தகவல் தொழினுட்ப பாடம் பாடசாலையில் நடைமுறைபப்டுத்தப்படவில்லை. அதனைப் புதிதாகத் தயார் செய்ய வேண்டியுள்ளது இந்தப் பாடத்திட்டத்தை தயார் செய்து கல்வி அலுவல்கள் சபைக்கு முன்வைக்கும் போது சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. உட்புகுத்தப்பட்ட மாற்றத்தை தயார் செய்யும் போது கல்வி அலுவல்கள் சபையின் ஆலோசனை கிடைத்தது. அதன்படி 6, 7, 8, 9 ஆம் தரங்களுக்கான பாடத்திட்டம் கல்வி அலுவல்கள் சபை மற்றும் நிறுவனப் பேரவைக்கு முன்வைத்து அனுமதியைப் பெற்றுத் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அச்சிடுவதற்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது.

(ஆ) (I) தீர்மானித்தபடி பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

(II) ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டத்திற்கான ஆசிரியர்களைப் பங்கு பற்றச் செய்தல் மாகாணக் கல்விக் காரியாலயத்தினூடாக முறையான விதிமுறைகளின்படி நடத்தப்பட்டது. வருடாந்தத் திட்டமிடலின்படி ஆற்றப்பட வேண்டிய பணிகள் தாமதமாகிய காரணத்தினால் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாய்மொழி மூலமான அனுமதியை மாத்திரம் பெற்றுக் கொண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இது தொடர்பில் குறித்த உத்தியோகத்தருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

(அ) வாழ்க்கைத் தேர்ச்சி அடிப்படையில் ஆங்கில அறிவினை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம்
(English as a Life Skill)

(I) இந்த வேலைத்திட்டத்தின் 1ஆம் கட்டம் என்ற வகையில் வேலைத்திட்டத்தின் 50 நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு கல்வியமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. கல்வியமைச்சின் மூலம் அந்த வேலைத்திட்டம் பிரதி செய்யப்பட்டு சகல மாகாணக் காரியாலயங்களின் ஊடாகப் பாடசாலைகளுக்கு வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வேலைத்திட்டம் தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக 24 நிகழ்ச்சிகள் அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க தயார் செய்யப்பட்டிருந்தபோதும் செயற்றிட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு விட்டன.

(II) செயற்றிட்டம் முடிவடைந்துள்ளதுடன் 2ஆம் கட்டப் பணிகள் நிறுத்தப்பட வேண்டியிருந்ததால் மீதிப் பணத்தொகை கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட வேண்டிய பதிவு செய்தல் நூலக காட்சிக்காக வைக்கப் பட்டு உரிய பணி தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) நெனச கல்வி வேலைத்திட்டம்

(I) புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஒரு நாளைக்கு 12 மணித்தியாலம் ஒளிபரப்பும் காலத்தை டயலொக் ஆசியாடா நிறுவனத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டது எனினும் தினமும் 12 மணித்தியால கால எல்லைக்குள்

ஒளிபரப்புக்காகப் புதிய நிகழ்ச்சித் திட்டம் தயார் செய்ய முடியாதென தேசிய கல்வி நிறுவகம் டயலொக் ஆசியாடா நிறுவனத்திடமும் கல்வியமைச்சிடமும் சுட்டிக் காட்டியுள்ளது. அதன்படி ஒரு நாளைக்கு 4 மணித்தியாலம் ஒளிபரப்புச் செய்யவே திட்டம் தயாரிக்கப்பட்டு இதற்காக 2115 நிகழ்ச்சிகள் தேவைப்படும் எனக் கல்வி அமைச்சிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்தளவு ஒருவருடத்திற்குள் தயாரிக்கக் கூடிய இயலுமையை தேசிய கல்வி நிறுவகம் கொண்டிருக்கவில்லை என அதற்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். இங்கு பணிப்பாளர் நாயகம் அவர்கள் வருடத்திற்கு 100 நிகழ்ச்சிகளை மட்டுமே தயாரித்து வழங்க முடியும் என இணக்கம் தெரிவித்ததோடு அதற்காக டயலொக் ஆசியாடா நிறுவனத்திடம் நிதி பெற்றுத்தருமாறு கேட்கப்பட்டுள்ளது. டயலொக் நிறுவனம் இலத்திரனியல் பரவற் துறைக்கு 2.7 மில்லியன்களை மாத்திரமே காசோலையாக வழங்கியிருந்தது. அத்தொகை பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் நிறுவனக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் தயாரிப்பு தர்மவாகினி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது எதிர்காலத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

(II) தயாரிப்புக்காக வழங்கப்பட்டுள்ள கணினியைப் பயன்படுத்தி தேசிய கல்வி நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

(III) 2015ஆம் ஆண்டு ஒளிபரப்பப்படுவதற்கு எதிர்பார்த்த உயர்தர பொறியியல், மற்றும் உயிரியல் தொழினுட்ப பாடத்திற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிப்பதற்காகத் திரைப் பிரதிகளுக்கு நிதியொதுக்கீடு வழங்கப்பட்டு அந்தப்பணி நிறைவேற்றப் பட்டு இருந்தபோதும் நிகழ்ச்சித் தயாரிப்புக்கான நிதியொதுக்கீடு வழங்கப் படாமையினால் தயாரிப்புப்பணிகள் இடம்பெறவில்லை.

(இ) 2012 ஜுன் 2ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அமைக்கப்பட்ட ஆசிரிய அபிவிருத்திக்கான தெற்காசிய நிலையத்தின் ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு (UNESCO) 2ஆவது பிரிவிற்குரிய நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்ட தோடு அந்தப் பணிகளை செயற்படுத்துவதற்குத் தாமதமாகியது. இதற்குக் காரணம் முகாமைத்துவ குழுவினருக்கான யுனெஸ்கோ அமைப்புப் பிரதிநிதிகளின் தெரிவு செய்தலில் தாமதம் ஏற்பட்டமையாகும். இப்போதைக்குச் சகல முகாமைத்துவ குழு அங்கத்தவர்களை நியமித்துள்ளதால் ஆரம்பகட்ட நிர்வாக விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

(I) முகாமைத்துவக் குழு 2017-03-31ஆம் திகதி கூட்டப்பட்டதோடு வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடல் தயாரிக்கப்படுவது அவசியம் எனவும் கல்விசார் முறைகள் பற்றி கட்டமைப்பு ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

(II) கல்விச் செயலாளர் மூலம் செயற்குழு ஆரம்ப நிதி ஒதுக்கீடும் நிர்வாகக் கட்டமைப்பினையும் மேற்கொள்வதற்கான விஷேட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு 2 தவணைகளுக்கான கூட்டங்கள் கூட்டப்பட்டுள்ளது.

(III) இந்தக் குழுவின் தீர்மானங்களும் சிபார்சு முகாமைத்துவ சேவை திணைக் களத்திற்கு விசேட ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

(IV) யுனெஸ்கோ தொழினுட்ப உதவித்திட்டமாக ஆலோசகர்களின் உதவி பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதோடு கீழ்வரும் ஆலோசகர்களின் தொழினுட்ப முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- Mr. Shigeru Aoyougi Director, UNESCO, South Asia
- Sri Shantha Mathew Secretary  N C T E, India
- Mr. Muhammed Rufique Tahire Educational Adviser Ministry of fedral  Educa tion, Pakistan
- Mr. Muhudul Islam, Jounit secretary, ministry of Education Baryakdeh.

(V) இந்த நிலையத்திற்கான கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடம் கல்வி தலைமை அபிவிருத்தி முகாமைத்து பீடத்தின் மூலம் ஒழுங்கமைப்பு செய்யப்படும் உள்நாட்டு/ வெளிநாட்டுக் கற்கை நெறிகள், மாநாடுகள், செயலமர்வுகள், விரிவுரைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஆகையால் கட்டிடம் கல்விசார் விடயங்களுக்காக ஆகக்கூடிய அளவில் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்காக உரிய இயந்திர உபகரணங்கள் கல்வியமைச் சிடம் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ) மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் 17.53 ஏக்கர் நிலப்பகுதி தென்னகெலேவத்த நிலப்பகுதியையும் பெற்றுத்தருதல் சம்பந்தமாக மகரகம பிரதேச செயலாளர் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைக்கமைய இந்த நிலம் தொடர்பாக கல்வியமைச்சின் ஊடாக அமைச்சரவை பத்திரிகை முன்வைக்கப்படுவதற்கு இந்நிலம் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ள காணியமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்திற்குட்பட்ட மீப்பேயில் அமைந்துள்ள 16.1625 ஏக்கர் வாடகைக்காணி, கஹட்டஹேன காணியை சுவீகரிக்க உரிய விபரங்கள் பாதுக்க பிரதேச செயலாளருடன் கலந்தாய்வு செய்து தொடர்புகளின்படி காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

2017-10-24ஆம் திகதி கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டு தேசிய கல்வி நிறுவகத்திற்குச் சட்டப்படி உரித்துடையதாக்கியதாகத் தீர்மானம் வழங்கப்பட்டது.

(ஈ) கணக்காய்வு அறிக்கையின்படி சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின்படி அச்சிடும் செலவு முறையாகக் கணக்குப் பதிவு முறையொன்றினைத் தயாரித்தல் அவசியம் எனவும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் பிரதிப்பணிப்பாளர் நாயகத்திடம் (விஞ்ஞான தொழினுட்ப) ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

(உ) நில அளவை திணைக்களத்தினூடாக தேசிய கல்வி நிறுவகத்திற்கு கிடைக்கப் பெறாத மீதமான படவரைவுக்கான 170 புத்தகங்கள் தேசிய கல்வி நிறுவகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதன்படி வரைபு புத்தகங்கள் 10000 முழுமையாக கிடைக்கப் பெற்றுள்ளது. 2017-12-31ஆம் திகதியளவில் சகல புத்தகங்களையும் பங்கிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதோடு, 3 மாகாணங்கள் மட்டும் புத்தகங்களைக் கொண்டு செல்ல வருகை தரவில்லை (ஊவா,சப்பிரகமுவ, கிழக்கு) சப்பிரகமுவ மாகாணத்திற்கு உரிய புத்தகங்கள் 2018-01-10ஆம் திகதி கொண்டு செல்லப்பட்டுள்ளன.

(ஊ) 2016 பெப்ரவரி 16ஆம் திகதி அதற்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகத்தின் வாய்மொழிக் கட்டளையின்படி வெளிநாட்டு வதிவிட அறை 01 இல் வதிவதற்காகப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி, துணைச்சேவை) அவர்களிடம் வழங்கப் பட்டுள்ளது. அந்த அதிகாரியிடம் வதிவிட கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிறுவன நிர்வாக பேரவையினால் கீழ்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட தோடு அதன்படி உரிய உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு வதிவிடத்திலிருந்து வெளியேறுமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. உதவிப் பணிப்பாளர் நாயகம் 2017-08-05ஆம் திகதி வெளிநாட்டவருக்கான வதிவிடதிலிருந்து வெளியேறியதோடு தற்போதைக்கு அவர் நிறுவன சேவையில் இல்லை.

(எ) தேசிய கல்வி நிறுவக மகரகம, மீப்பே வளாகத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லங்களிலுள்ள பணியணியினரிடமிருந்து தண்ணீர் கட்டணம் அறவிடப்படாமையை ஏற்றுக்கொள்கிறேன்.

கணக்காய்வு ஊடாகக் காட்டப்பட்டுள்ள விடயங்களினூடாக இந்த உத்தியோக இல்லங்களுக்கான நீர் கட்டணம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) நிறுவனத்தில் உள்ள விரிவுரை மண்டபத்திற்கான வாயு சீராக்கல் இயந்திரம், பல்லூடக இயந்திரம் ஆகியன இணைக்கப்பட்டுப் நவீனமயப்படுத்தல்கள் இடம்பெற்ற போது விரிவுரை மண்டபங்களிலிருந்தே கதிரைகள், மேசைகள் அகற்றப்பட வேண்டி ஏற்பட்டது. அத்தளபாடங்கள் பாவிக்கும் நிலையிலுள்ளதால், அவை தேவைப்பாடுடைய வேறு துறைகளுக்கு வழங்கப்பட்டது.

(ஐ) 2010ஆம் ஆண்டுக்குரியதான மீதியிலுள்ளவற்றை எதிர்காலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாக கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு கணக்குகளில் அவற்றைச் சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனம் என்ற வகையில் அகற்றப்பட வேண்டிய எந்த ஒரு பணத் தொகையும் திறைசேரியின் அனுமதி இல்லாது அறவிட முடியாக் கடனாக இனம் காணப்படவில்லை. ஆகையால் அனுமதி பெற்றுக் கொள்ளத்தக்கவாறு அறவிடமுடியாக் கடனுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**4.3 நிதியுதவியின் உபயோகம்**

(அ) அவுஸ்ரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட (Aus. Aid) நிதி ஒதுக்கீட்டின் கீழ் க. பொ. த (உயர்தரம்) தெரிவு செய்யப்பட்டு சில பாடங்களுக்காக பாடத்திட்டம் உபகரணங்கள் தயார் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2014ஆம் ஆண்டு கீழ்வருமாறு புத்தகங்களை தயாரிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அதுபற்றிய தற்போதைய நிலைமை கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| துறை | பாடம் | வளநூல் | வினாவிடைத் தொகுப்பு |
|---|---|---|---|
| சிங்களம் | சிங்களம் | பொருத்தம் இல்லை | கல்வியலுவல்கள்சார் சபையினதும் நிறுவன பேரவையினதும் அனுமதி பெறப்பட்டுள்ளது. 2017-10-26ஆம் திகதி அச்சிட ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| தமிழ் | தமிழ் | பொருத்தம் இல்லை | நிறைவேற்றப்பட்டு வெப்தளத்தில் வழங்கப்பட்ட அதேவேளையில் அச்சகத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.<br><br>கல்வி அலுவல்கள் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்) |
| சமூக விஞ்ஞானம் | புவியியல் | பொருத்தம் இல்லை | சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூல புத்தகங்களுக்கு நிறுவன பேரவையின் அனுமதி கிடைத் துள்ளது. 2017-10-24ஆம் திகதி சிங்கள மொழி மூல புத்தகம் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2017 மார்கழி 13 இல் தமிழ்மொழி மூல புத்தகங்களும் 2017-12-14இல் ஆங்கில மொழி மூல புத்தகங்களும் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | உயிரியல் | 2017இல் அறிமுகப்படுத்தப் பட்ட பாடத்திட்டம், புதிய பாடத்திட்டத்திற்கு பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | 2017இல் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய பாடத்திட்டம் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| விஞ்ஞானம் | இரசாயன விஞ்ஞானம் | 2017இல் அறிமுகப்படுத்தப் பட்ட பாடத்திட்டம் புதிய பாடத்திட்டத்திற்கு பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | 2017இல் அறிமுகப்படுத்தப்பட புதிய பாடத்திட்டம் பொருத்த மான வகையில் தயாரிக்கப் பட்டுள்ளது. |
| | பௌதிக விஞ்ஞானம் | 2017இல் அறிமுகப்படுத்தப் பட்ட பாடத்திட்டம் புதிய பாடத்திட்டத்திற்கு பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | 2017இல் அறிமுகப்படுத்தப்பட பட்ட புதிய பாடத்திட்டம் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| கணிதம் | இணைந்த கணிதம் | ஆங்கில மொழி மூலத்தின் I, II ஆம் பகுதிகள் 2017-09-08 இல் இடம்பெற்ற கல்வியலுவல்கள்சார் சபையிடம் முன் வைக்கப்பட்டு அனுமதி பெறப் பட்டுள்ளது. சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களுக் கானவை அடுத்த கல்வி யலுவல்கள் சபையின் அனுமதிக்காக முன் வைக்கப்படவுள்ளது. | ஆங்கில மொழி மூலத்திற்கான கல்வியலுவல்கள் சபையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. குழுவின் சிங்கள, தமிழ் மொழி மூலம் அனுமதிக்கான அடுத்த கல்வியலுவல்கள்சார் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| தொழினுட்பக் கல்வி | விவசாய விஞ்ஞானம் | பொருத்தம் இல்லை | கல்வியலுவல்கள் சபை மற்றும் நிறுவனப் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது.<br>2016-07-07ஆம் திகதி அச்சகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>(சிங்கள/ தமிழ்/ ஆங்கில மொழி மூலம்) |
| | தொழினுட்ப வியல் | பொருத்தம் இல்லை | சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பிரதிகளுக்கான கல்வியலுவல்கள் மற்றும் நிறுவன பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது.<br>2017 இலிருந்து புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதனால் இதன் வெளியீடு அச்சிடப்படாத அதே வேளை 2017-07-20 இணையத் தளத்திற்கு மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளது. |
| தொழினுட்பக் கல்வி | தொழினுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | பொருத்தம் இல்லை | கல்வியலுவல்கள் சபையினதும் நிறுவன பேரவையினதும் அனுமதி பெறப்பட்டது.<br>(சிங்கள மற்றும் தமிழ்மொழி மூலம்)<br>2016ஆம் ஆண்டில் அச்சிடலுக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| | கணக்கீடு | 2015ஆம் ஆண்டு கல்வி அலுவல்கள் சபைக்கு அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>நிறுவனப் பேரவையின் அனுமதிக்கு அனுப்பப் பட்டுள்ளது. மீண்டும் 09-01-2018 இல் இடம் பெற்ற கல்வி அலுவலகள் சபைக் கூடத்தில் முன்வைக்கப் பட்டு அனுமதிபெறப் பட்டுள்ளது. | சிங்கள மொழி மூல வினாவிடைத் தொகுப்பு 2018-01-09ஆம் திகதி இடம்பெற்ற கல்வியலுவல்கள் சபைக் கூட்டத்தில் அனுமதி அனுமதி பெறப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| வணிகக் கல்வி | பொருளியல் | 2015கல்வியலுவல்கள் சபையிடம் முன் வைக்கப்பட்ட அதேவேளை மீண்டும் தயாரிக்கப்பட ஆலோசனை வழங் கப்பட்டதுடன் 2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத் தப்பட்ட பாடத்திட்டத்திற் குப் பொருத்தமாகத் தயாரிக்கப்பட்டு 10 பேர் கொண்ட மீளாய்வுக் குழுவிடம் 2018-01-09 ஆம் திகதி இடம்பெற்ற கல்வியலுவல்கள் சபையின் அனுமதி கிடைத்தது. | சிங்கள மொழி மூல வினாவிடை 2018-01-09ஆம் திகதி நடைபெற்ற கல்வியலுவல்கள் சபையின் கூட்டத்தில் முன்வைத்து அனுமதி பெறப்பட்டது. |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள புத்தகம் பற்றிய தேவையான எதிர்காலச் செயற்பாடுகளை செய்வதற்காக பிரதிப் பணப்பாளர் நாயகம் (மொழிகள், மானிடவியல், மற்றும் சமூக விஞ்ஞானம்) பொறுப்பு வகிக்கும் (தற்காலிக) பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விஞ்ஞான தொழினுட்பம்) இடம் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

(ஆ) சேவையாளர்களின் கடன் நிதியமானது ஏற்படுத்தப்பட்டுள்ளமையானது நிறுவன சேவையாளர்களுக்குக் கடன் வழங்குவதால் கிடைக்கும் வட்டி மற்றும் நிறுவன வருமானத்தின் பெறப்படும் பணம் மூலம் நிறுவன சேவையாளருக்கு கடன் வழங்குவதற்காகும். அந்த நிதியம் உரிய வங்கிக்கணக்கில் பேணப்பட்டு கடன் தொகையாக பணம் வழங்கப்படும் இந்த நிதியத்தில் பணம் குறித்தளவு காணப்படவில்லை.

2017ஆம் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையை தயார் செய்யும்போது முழுத் தொகைக்குப் பொருத்தப்பாடுடையதாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) 2017.09.27ஆம் திகதி நடந்த 58 வது கணக்காய்வும், முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் இதன் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

வெளிவாரி ஆய்வாளர்களின் மூலம் முன்வைக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொள்ள இந்த நிதி பயன்படுத்தப்படும். 2017ஆம் ஆண்டுக்குள் 04 ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஆக்கங்களைத் தயார்படுத்தி நிறுவன பேரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. வெளிவாரி ஆய்வாளர்களின் ஆய்வு யோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான பத்திரிகை விளம்பரங்கள் 2017.06.14ஆம் திகதி தினமின, தினகரன், மற்றும் Daily News பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.

பத்திரிகை விளம்பரங்களின்படி அய்வுகளை மேற்கொள்வதற்கான 8 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த விண்ணப்பங்களை மீளாய்வு செய்து விமர்சன ஆய்வுகள் 03 தெரிவு செய்யப்பட்டு அவற்றை மேற்கொள்ள நிதியளிப்புக்கள் வழங்கப்பட்டன.

ஆய்வு நிதி எதிர்வரும் ஆண்டுகளுக்காக தொடர்ச்சியாகப் பேணி வரப்படுவதுடன் 2018ஆம் ஆண்டு நிதியளிப்பதற்காகவும் வழங்கப்படவுள்ளது.

(ஈ) நிறுவன நடைமுறை கணக்குகளில் மீதியாக உள்ள தொகையில் ரூ. 70 மில்லியன் பணம் 2017.10.04ஆம் திகதி நிரந்தர வைப்பிலிடப்பட்டது.

## 4.4 பயன்பாடற்றதும் குறைப்பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

(அ) 2013, 2014, 2015ஆம் வருடங்களில் வீடியோ நிகழ்ச்சித் தயாரிப்பு தே.க.நிறுவனத்தில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. இதன்படி நெனச அலைவரிசையின் ஒளிபரப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஏதுவாக குறைந்த செலவுடன் கூடிய தர நிலையில் நிகழ்ச்சகள் தயாரிக்கப்பட்டன. நெனச அலைவரிசையில் ஒளிபரப்பு கால எல்லை வரையறுக்கப்பட்டதுடன் இந்நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்தப்படும் நடைமுறையே இந்நிகழ்ச்சிகளில் நெனச அலை வரிசையில் மீண்டும் ஒளிபரப்படும். அவ்வாறே நிறுவனத் துறைகளின் வேண்டுகோளிற்கிணங்கச் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் பிரதிகள் தயாரிக்கப்பட்டு துறைகளின் பயிற்சி செயற்பாடுகளுக்காக பயன்படுத்த அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விஷேட வேண்டுகோளுக்கான நிகழ்ச்சிகள் விஞ்ஞான தகவல் தொழினுட்பத் துறையினால் தயாரிக்கப்பட்டு பிரதிகள் எடுக்கப்பட்டு விற்பனை செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2011, 2012ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட இறுவட்டுக்கள் இப்போதைக்குத் தயார் நிலையிலிருப்பதோடு ஒலிப்பதிவுக் கருவியின் பாவனை குறைவாக இருப்பதால் இறுவட்டின் விற்பனை நிறுத்தப்பட்டுவிட்டது.

2017.09.27ஆம் திகதி நடைபெற்ற 58வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் இது பற்றி கலந்துரையாடப்பட்டது.

மீதியாகவுள்ள இறுவட்டுக்கள் கல்வியமைச்சின் மேலைத்தேய சங்கீத ஒன்றியத்துடன் கலந்துரையாடிப் பாடசாலைகளுக்குப் புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பது பொருத்தமானது எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## 4.5 தாமதமாகிய செயற்றிட்டம்

2008ஆம் ஆண்டு நிறுவனத்தினூடாக வழங்கப்பட்ட விதிமுறைப் பத்திரங்களின்படி முழுச் செலவு ரூ. 28 மில்லியன் ஆகும். அதேவேளை 2017ஆம் ஆண்டில் மீண்டும் பெற்றுக் கொண்ட காகிதாதிகள் செலவு ரூ. 63 மில்லியன் என நிபுணத்தவ ஆலோசனை நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது.

கல்வி அமைச்சின் 2017.07.21ஆம் திகதி நடத்தப்பட்ட கணக்காய்வும் முகாமைத்துவ குழுவும் 2வது கூட்டத்தின் போது பணிப்பாளர் (பாடசாலைக் கட்டிடங்கள்) தொடர்பு கொள்ளும் பொழுது இதன் வினைத்திறன் பற்றி கவனம் செலுத்தி அறிக்கையொன்றை முன்வைக்குமாறு தே.க.நி. பணிப்பாளரிடம் (பொறியியலாளர் சேவை) கல்விச் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி கல்வி அமைச்சின் மேலதிகப் பணிப்பாளர் (பாடசாலைக் கட்டிடம்), சிவில் பொறியியலாளர் (பாடசாலைக் கட்டிடம்) தே.க.நி. பணிப்பாளர் (பொறியியலாளர் சேவை) மூலம் உரிய கட்டிடம் பரீட்சிக்கப்பட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்ட சிபாரிசின்படியும் கருத்துக்களின்படியும் ஆலோசனைச் சேவை நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டு மதிப்பீடுகளை இப்போதைக்கு மாற்றம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அதற்கான கலவியமைச்சின் பாடசாலைக் கட்டிடப் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

நிபுணத்துவ ஆலோசகர் மூலம் வழங்கப்பட்ட அறிக்கையைப் பயன்படுத்தி அதிலுள்ள கருத்துக்களுக்கு அமைய எதிர்காலச் செயற்பாடுகள் செய்வதற்கும், அதன்படி கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் 2017.10.24ஆம் திகதி கல்வி யமைச்சில் நடந்த கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்தப்பணி 2018ம் ஆண்டு நிறைவேற்றுவதற்காக அவ்வருட திட்டமிடலில் உள்வாங்கி நிதியொதிக்கீடு செய்து கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**4.6 பணியாளர் குழுவின் நிர்வாகம்**

(அ, ஆ) DMS/B1/37/03/vol - III இலக்க 2011.12.22 திகதியும் கொண்ட முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தில் 08ஆம் பந்தியில் உள்ளபடி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அந்தத் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படும். அதில்,

1. தே.க.நி /நி.நி ./PS/ DMS./B1./121/27/2016 உப/2015 டிசம்பர் 1ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தில் 108 பதவிகளுக்கான அனுமதி பெற்றுக் கொள்வதற்காக அனுப்பட்டுள்ளது.
2. 2016.09.29ஆம் திகதி மீண்டும் 201 பதவிகளுக்கான அனுமதி பெற்றக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது.
3. 2016.02.29ஆம் திகதி 190 பதவிகளுக்கான அனுமதி பெற்றக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது.
4. இல. DMS/1501, 2016.09.30ஆம் திகதிய கடிதத்தினூடாக 79 பதவிகளை நிரப்பு வதற்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது.

அனுமதிக்கப்பட்ட பதவிகளில் விண்ணப்பம் கோரி நேர்முகப் பரீட்சை நடத்திப் பணிப்பாளர் பதவிகள் நான்கிற்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 22 பேர் உள்ளக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர் பதவிக்காக நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு 08 பேர்களுக்கு உள்ளக பதவியயர்வு நியமனம்

வழங்கப்பட்டது. உதவி விரிவுரையாளர் பதவிக்காக நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு 25 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. புத்தகப் பதிவாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டது.

முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நேர்முகப்பரீடசை நடத்தப்பட்டுள்ளது. சாரதி நேர்முகப்பரீட்சை 2017.11.13ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகமும் நிதியும் மற்றும் துணைச் சேவையும்) விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது. மீதிப்பதவிக்களுக்காகப் பத்திரிகையூடாக விளம்பரப்படுத்தப்பட்டதோடு, நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ) வெற்றிடம் நிலவும் பணிப்பாளர் பதவிக்காக நியமனம் செய்வதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறுவது தாமதமாகியதால் அப்பதவிக்கு பணிப்பாளர் நாயகத்தினால் தற்போதிருக்கும் பணிப்பாளருக்குத் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூ. 1,061,558 கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளது. தினசரி கொடுப்பனவு அடிப்படையில் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை நியமனம் செய்வது. நிறுவன பேரவையின் தலைவரான கல்விச் செயலாளர் மூலமாகும்.

(ஈ) இந்த நியமனம் வழங்கல் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தினால் ஆகும். சேவையின் தேவையைக் கருதி அதனைக் கவனத்திலெடுத்து முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு வெற்றிடம் நிரப்பும் வரை மட்டுமே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 2016.09.30 ஆம் திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதி உடனடியாகப் பெறப்பட்டுப் பணிப்பாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- 2016.12.19 இல் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையின் பெறுபேற்றின்படி நிறுவனப் பேரவையின் அனுமதி பெறப்பட்டு சம்பள இல. 870 M. A. G. W. குலரத்ன அவர்களும் சம்பள இல. 980 M. R. W. மத்துமு அவர்களும் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள்.

- பணிப்பாளர் (நிதி) பதவிக்கான உத்தியோகத்தர் (பெண்) 2016.12.01 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டுள்ளதோடு சம்பள இல. 0080 B.C.K. குணவர்த்தன அவர்கள் 2016.12.01 இலிருந்து பணிப்பாளர் (நிதி) பதவிக்கு தற்காலிகமாக நியமிக்கப் பட்டுள்ளார்.

சம்பள இல. 0597 சிரேஷ்ட விரிவுரையாளர் W. M. A. B. விஜய சூரிய அவர்கள் 2016.11.11 ஓய்வு பெற்றுள்ளார்.

சம்பள இல. 1307 (திருமதி) G. H. அசோகா தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதால் இறுதிவரை நியமனம் பற்றி நிறுவன சபை தீர்மானிக்கவில்லை.

(உ) சம்பள இல. 1443 உடனான ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்த உத்தியோகத்தர் 2016.11.30 சேவையிலிருந்து தானாகவே விலகிக் கொண்டார். சம்பள இல. 1373 உடனான உத்தியோகத்தர் 2017.04.30இல் சேவையை நிறைவு செய்துள்ளார். அனுமதிக்கப்பட்ட உதவி விரிவுரையாளர் 25 பதவிகளுக்காக நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(ஊ) ஏற்றுக் கொள்கிறேன்.
பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக நிதிப்பிரிவிடம் மீண்டும் விளக்கம் தரும்படி பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) இடம் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

(எ) பதில் கடமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சம்பள இல. 1307, 0870 எனும் உத்தியோகத்தர்களினை விடுவிப்பதற்கான கடிதம் அனுப்பட்டுள்ளது. பின்னர் முறையாக நிரந்தரமாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

## 5. பொறுப்புக் கூறலும் நல்லாட்சியும்

### 5.1 கொள்முதல் திட்டம்

(அ) கொள்முதல் திட்டமிடலின்படி காரியாலய உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாகப் பிரதானமாக நிதி ஒதுக்கீடு பங்கிடுதல். TSEP, DFAT இன் கீழ் ஆகும். அந்த கொள்முதலைப் பெற்றுக் கொள்வதில் தாமதமாவதால் மூலதனப் பொருள்களைக் கொள்வனவு செய்தலுக்காக ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் தாமதமாகிவிட்டது.

அரசின் முன்னுரிமை வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்டிருக்கும் 13 வருட தொடர்ச்சியான கல்வி வேலைத்திட்டம் மற்றும் அதனோடிணைந்த செயற்பாடுகளை ஆரமபிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் (காரியாலய மரத்தளபாடம், நிழற்பட பிரதி இயந்திரம், கணினி, அச்சக கணினி Riso இயந்திரம், தொழினுட்ப உபகரணம் போன்ற) கொள்வனவு செய்வதற்கு முனனுரிமை வழங்கப்பட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபடியால் பொருட்களின் முன்னுரிமை இறுதி நேரத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(ஆ) நிறுவன காரியாலயத்தின் தேவைகள் காரணமாகக் கொள்வனவு செய்யும்போது இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எப்படியாயினும் எதிர்காலத்தில் பொருட் கொள்முதல் திட்டமிடலின்படி கொள்வனவு செய்வது நடைபெறும்.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

இம்முரண் காட்டப்படுவதானது நிதிக்கூற்றுக்களின் நிறுவனத்தின் சில செலவுகள் வகைப்படுத்தும் முறைமை பாதீட்டின் உருப்படிகளுக்மைய வேறுபட்டிருப்பதாகும். ஆகையால் 2017ஆம் ஆண்டிலிருந்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் செலவு உருப்படிகளுக்குச் சமாந்தரமாக உருப்படிகளைத் தெரிந்தெடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**வருமானம்**

**நிறுவன வருமானம்**
பாதீட்டில் குறிப்பிடப்படுவது, நிறுவனத்தினால் பேணப்பட்டு வரும் பல்வேறு கற்கைநெறிகளில் கிடைக்கும் வருமானத்தில் உரிய வருடத்திற்குள் செலவு செய்ய எதிர்பார்க்கும் பணத்தொகையாகும். இங்கு பெயரளவுப் பெறுமதியாகத் குறிப் பிட்டுள்ளது, அவ்வருடத்திற்குள் வருமானமாகக் கிடைக்கப் பெற்ற பணம் மட்டுமே.

**தனிநபர் பாதீட்டுக் கொடுப்பனவு**

**சம்பளமும் கூலியும்**
இங்கு பெறுமதியாகக் காட்டப்பட்டுள்ளது சம்பளமும் கூலியும் (0103) பணம் மட்டுமே அந்தப் பணத்தில் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு (0116) சேவையாளர்களின் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு, ஊழியர் நம்பிக்கை நிதிய 3% பங்களிப்பு (0113) என்பவற்றில் ரூபா. 28, 777,357 மொத்தமாகும். அதன்படி உண்மையான செலவு ரூ.295,497,078 ஆகும். அதன்படி முரண் 0.2% ஆகும்.

மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவு 2016ஆம் ஆண்டு இறுதியில் அரசின் முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக 13 வருட தொடர்ச்சியான கல்வி வேலைத்திட்டமும் அது சம்பந்தப்பட்ட கலைத்திட்ட அபிவிருத்தியும் ஆகும். கலைத்திட்ட அபிவிருத்தி நிறுவனத்திற்குப் பொறுப்பளித்தலும் பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக மேலதிக நேர வேலைக்காகவும் எதிர்பார்க்கப்பட்டதை விட மேலதிக செலவுகளைத் தாங்கிக் கொண்டமையால் முரண்கள் ஏற்பட்டுள்ளது.

**போக்குவரத்துச் செலவு**

- வெளிநாடு

வெளிநாட்டுப் போக்குவரத்துச் செலவிற்காக உலக வங்கி நிதியொதிக்கீட்டின் கீழ் திட்டமிடப்பட்ட குறுகிய கால வேலைத்திட்டங்கள் சில நடைமுறைப்படுத்தப்பட போதியளவு கால அவகாசம் இல்லாமை குறைபாட்டிற்குக் காரணமாகும்.

- உள்நாடு (தேசிய)

பாடத்துறை அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் உலக வங்கியின் செயற்றிட்டமாகிய TSEP + DFAT நிதியொதுக்கீட்டின் கீழ் ஆகும். அந்த நிதியொதிக்கீடு கிடைக்கத்தாமதமாகியதால் திட்டமிடப்பட்ட துறையின் மதிப்பீட்டு வேலைத்திட்டம் செயற்படாமல் போனமை மேற்படி குறைபாட்டிற்குக் காரணமாகும்.

**வழங்கலும் நுகர்ச்சிப் பொருட்களும்**

- காகிதாதிகளும் காரியாலயப் பொருட்களும்

2016 ஆம் ஆண்டிற்குள் ESDP நிதியொதுக்கீட்டின் கீழ் நிறைவு செய்வதற்கு திட்டமிட்ட மேலதிக பாடநெறிகள், பொருட்கள் பல உரிய முறைப்படி நிறைவேற்றப் பட்டு கல்வி அலுவல்கள் சபையின் அனுமதியும் பெறுவதற்குத் தாமதமாகியதால், உரிய வெளியீடு அச்சிடப்படத் தாமதமாகியதும் காரணமாகும். எனினும் அந்த அச்சிடுதல் வேலைகள் 2017 ஆம் ஆண்டு முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டபடியால் அதற்குரிய நிதி 2017 ஆம் ஆண்டு பாவனைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

| **பேணுகை** | **வாகனப் போக்குவரத்து** | **காரியாலய உபகரணம்** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| வரவு செலவுப் பெறுமதி | 4,500,000 | 5,500,000 |
| உண்மைப் பெறுமதி | 6,992,754 | 8,857,112 |

இதன் கீழ் உள்ள உண்மைச் செலவிற்குள் மூலதன ஒதுக்கீட்டுக்குள் உள்ள மீளெழும் செலவுகளும் விருத்தி செய்வதற்கான நிதியொதுக்கீட்டுக்கான செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமை இக்குறைபாட்டிற்குக் காரணமாகும்.

**உடன்படிக்கைச் சேவை**

- தபால் செலவும் பிரசாரப் பொருட்களும்

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தபால், பிரசார செலவு குறைவதற்கான காரணம் 2016 ஆம் ஆண்டிற்குள் ஆரம்பிக்கப்படவிருந்த பிரதான கற்கை நெறியின் கணிப்பீட்டுச் செயற்பாடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரப்புள்ளி யிடல் முறைமைக்குப் பொருந்தும் வகையில் மாற்றம் செய்ய நேரிட்டது. கற்கை நெறியில் இடைநடுவில் சிற்சில மாற்றங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டமையால் பாடநெறிக்காகத் சேர்த்துக் கொள்வோரிற்கான பத்திரிகை அறிவித்தல் செய்யப்படாமல் இருந்தது.

**பாதுகாப்புச் செலவும் சுத்திகரிப்புச் சேவை செலவும்**

இங்கு உண்மையான செலவு குறைவதற்குக் காரணம் உடன்படிக்கையின்படி முழுமையான கொடுப்பனவு செலுத்தப்படாமையாகும். (பணிகள் முடிக்கப்படாமை, உரிய சேவையாளரகள் எண்ணிக்கையான சமுகமளிக்காமை) போன்ற காரணங் களாகும். பிரதானமாக இந்தக் கொடுப்பனவு மதிப்பீடு செய்யப்பட்டது நிறுவனத்தின் வருமானங்களிலாகும்.

**வழிநடத்தல் செலவு**

- பணியாளர்களின் நலன்புரிச் செலவு

சேவையாளரின் நலன்புரிக் கணக்கில் குறிப்பிடப்பட்ட ரூ.750,000 விட ரூ.597,920 பணம் சேவையாளரின் நலன்புரிக்காகச் செலவு செய்யப்பட்டது.

இதன்படி நலன்புரிச் செலவுக்கான முழுச் செலவு ரு. 1,347,920 ஆகும்.

## 5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பகுதி

இங்கு ஓய்வு பெற்றுச் சென்ற, மற்றும் விலகிச் சென்ற பணியாளர் குழுவின் வெகுமதிக் கொடுப்பனவு வழங்கும் பொழுது மேலதிகமாக வழங்கப்பட்ட சம்பளத்தை அறவீடு செய்வதற்கான உரிய வெகுமதிக் கொடுப்பனவு தொகையைக் கணக்கில் எடுத்த பின் அதைக் குறைத்துக் கொண்டு மீதிப் பணம் வழங்கப்பட்டுள்ளது. சேவையிலிருந்து விலகிச் செல்லும் பணியாளர் குழுவில் அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள பணம் தவணை அடிப்படையில் அறவீடு செய்யக் கீழ்வரும் வழிமுறையில் திட்டமிடப்பட்டுள்ளது. அறவீடு செய்ய வேண்டிய பணத் தொகை 10 வருடத்திற்குள் அறவீடு செய்வதற்கான நிறுவனப் பேரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதோடு நிதிச்சட்டத்தின்படி இதற்கு நிதியமைச்சின் செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ள 2017.03.15ஆம் திகதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளதோடு 2017.06.06 ஆம் திகதி மீண்டும் கடிதம் நிதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பபட்டுள்ளது. மேலதிகமாகச் சம்பளம் வழங்கப்பட்டுள்ள ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் P. A. கொடிப்பிலி அவர்களுக்கு, பணத்தை மீண்டும் செலுத்துமாறு கோரிய கடிதம் ஒன்று 2014.10.14 ஆம் திகதி அனுப்பப் பட்டதோடு அதற்குப் பதில் இல்லாததால் 2016.09.21ஆம் திகதி மீண்டும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதில் இதுவரை கிடைக்கவில்லை. இதுபற்றி 2017. 09. 27 ஆம் திகதி நடைபெற்ற 58வது கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந் துரையாடப்பட்டது.

அதில் P. A. கொடிப்பிலி அவர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட தொகை சம்பந்தமாக இணக்கச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சட்ட உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். கொடிப்பிலி அவர்களின் நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த

சம்பளத்தைச் சரியானதா எனப் பரீட்சித்து நிறுவனத்திற்குச் சமுகமளித்துக் கலந்துரையாடுவதோடு இணக்கச் சபைக்கு வருவதாகவும் சட்ட அதிகாரி அறிவித்துள்ளார். கொடிப்பிலி அவர்களின் குறித்த விபரங்கள் பெறப்பட்டு சம்பள ஆணைக் குழுவுடன் கலந்துரையாடுவதாக சட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார். அந்தத்தீர்மானத்தின்படி மீண்டும் குறித்த தொகையினைச் செலுத்துவதற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளார் என சட்ட உத்தியோகத்தர் கூறியுள்ளார். கொடிப்பிலி அவர்களுக்கு உரித்தான வெகுமதித் தொகை வழங்கப்படவில்லை.

குறித்த தொகையினை மீளவும் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கணக்காய்வு குழுவின் தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 6. முறைமை மற்றும் கட்டுப்பாடு

**(அ) கணக்கீடு**

கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைகள் இதன் பின்னர் ஏற்படாமலிருக்கச் செயற்படுமாறு பணிப்பாளர் (நிதி) அவர்கட்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு**

நிறுவனத்தில் திட்டமிடல், பாதீட்டு மதிப்பீடு மற்றும் உண்மைக் கிரயங்களிலான மாதாந்த கண்காணிப்பு செய்யப்பட்டு நிறுவனத்தின் வினைத்திறனையும் விளைதிறனையும் விருத்தி செய்ய திட்டமிடல், நிதி மற்றும் உள்ளக, கணக்காய்வுப் பிரிவுகளிலான உத்தியோகத்தர்களை உள்ளடக்கி உள்ளக, நிதிமுகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு அதன்படி மாதாந்தம் நிதி பேணுகை முன்னேற்றத்தை பிழை திருத்தம் செயயப்பட வேண்டிய இடங்களில் திருத்தியமைத்தும் மதிப்பிடவும் அறிக்கையிடவும் வெற்றிகரமாக பௌதிக விருத்தியைப் சீரான நிதிக் கட்டுப்பாட்டினைப் பேணிக் கொள்ளவும் இதுவரை ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**(இ) இருப்புக் கட்டுப்பாடு**

அறிக்கையில் காணப்பட்ட இருப்பிற்காகப் பொருத்தமான வழிமுறைகள் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு வருங்காலத்தில் இவ்வாறான முறையில் பிரச்சினைகள் இல்லாத வகையில் இருப்பு முகாமைத்துவத்தினை மேற்கொள்ள குறித்த துறைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) **கொள்முதல் செயற்பாடு**

நிறுவனத்தின் வருடாந்த திட்டமிடல் தயார் செய்யும் சந்தர்ப்பத்தில் கொள்முதல் நடவடிக்கைகள் நீண்ட காலம் தாமதமாகியுள்ளமை அவதானிக்கக்கூடியதாகவிருந்த அதேவேளை மதிப்பீட்டின் பொழுது பல்வேறு திணைக்களங்களில் நிலவும் தேவைகள் கணக்கிடப் பட்டு அதன்படி கொள்முதல் திட்டமிடலைத் தயாரித்துக் கொள்வதோடு முறையான கொள்முதல் நடவடிக்கைகளைப் பேணிக்கொள்ள ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

கொள்முதல் நடவடிக்கைளுடன் தொடர்படைய செயலணிக்காக முறையான பயிற்சிகளை வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் கொள்முதல் நடவடிக்கைகள் கொள்முதல் கையேட்டினைப் பின்பற்றிச் செயற்படுத்தப் படும்.

(உ) **சொத்து முகாமைத்துவம்**

நிறுவனம் அமைந்துள்ள இடத்தைச் சட்டப்படி சுவீகாரம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ள்ளமை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP) மூலம் பொறுப்பேற்க நியமிக்கப்பட்ட GV- 1823 மற்றும் 61- 6298 இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் இரண்டு தேசிய கல்வி நிறுவகத்தினால் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. NA - 7574 எனும் வாகனத்தைப் பெற்றுக் கொள்வதாக கல்வியமைச்சுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. பொறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

(ஊ) **பணியாளர் குழு நிர்வாகம்**

முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 2016.09.30ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் வெற்றிடங்கள் 79 இற்கு அனுமதி கிடைக்கப்பட்டுள்ளதோடு அதில் 62 பேரை ஆட்சேர்த்துக் கொள்வதற்கும் பதவியுயர்வு செய்வதற்கும் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதேவேளை எஞ்சிய வெற்றிடங்கள் நிலவும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புத் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 2017.09.21ஆம் திகதி அனுமதி கிடைக்கப்பெற்ற வெற்றிடங்கள் 125இல் 07 இற்கான ஆட்சேர்ப்பும் பதவியுயர்வும் செய்யப்பட்டுள்ளதோடு 14 வெற்றிடங் களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. மீதி 30 வெற்றிடங்களுக்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(எ) **தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளல்**

இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்கத் தேவையான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஏ) **விடுதி பரிபாலனம்**

விடுதிக்கான குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவதோடு கல்வியமைச்சில் ஏனைய அரச நிறுவனங்களினூடாக ஒழுங்கு செய்யப்படும் செயலமர்வுகளுக்கு சமுகமளிப்பவர் களுக்காக தே.க.நி. ஊடாக ஒழுங்கு செய்யப்படும் செயலமர்வுகளுக்கு சமுகமளிப் பவர்களுக்கு விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

விடுதியானது முறையாகப் பரிபாலனம் செய்வதற்கான சட்டதிட்டங்கள் உள்ளடங்கிய சுற்று நிருபம் தயாரிக்கப்பட்டுப் பேணப்பட்டு வருகிறது.

**கலாநிதி ரி. ஏ. ஆர். ஜே. குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

ඇමුණුම 01

| Advance No. | Name | Amount |
|---|---|---|
| 162267 | Ananda M | 52,200.00 |
| 162288 | Wimalarathana G.A | 90,000.00 |
| 161822 | Jayawardena M.R.P.I | 40,000.00 |
| 160571 | Jasar J.M | 9,000.00 |
| 162736 | Rambukwella H.W.W.M.S.R | 36,400.00 |
| 160950 | Rajapaksha A.A.R.C | 38,800.00 |
| 160263 | DE silva L.W.R | 88,200.00 |
| 162201 | Chinthani R.B.N | 15,875.00 |
| 162392/93 | Chinthani R.B.N | 26,250.00 |
| 163030 | Asoka G.H | 24,000.00 |
| 162983 | Asoka G.H | 419.96 |
| 1601830 | Asoka G.H | 2,561.00 |
| | | **423,705.96** |

ඇමුණුම 02

7018/11/M

**SAMPATH BANK**
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank
Attidiya

OFFICIAL CHEQUE

NOT NEGOTIABLE
A/C PAYEE ONLY

Date: 2 8 0 7 2 0 1 7
D D M M Y Y Y Y

Pay DIRECTOR GENERAL A/C NO:607624 BOC-MAHARAGA-MA N.I.E 7018/11/M — Or Order

Rupees Fifty Six Thousand Five Hundred Twenty Seven only

Rs. 56,527.00

SAMPATH BANK PLC

Authorised Signatory    Authorised Signatory

Sampath Bank PLC - Company No. PQ 144

⑈002670⑈ 7278⑆089⑆ 9004090000⑈

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank
Attidiya

OFFICIAL CHEQUE

NOT NEGOTIABLE
A/C PAYEE ONLY

Date: 2 7 0 7 2 0 1 7
D D M M Y Y Y Y

Pay DIRECTOR GENERAL A/C NO.607624 BOC -MAHARAGAMA N.I.E 7018/11/M — Or Order

Rupees Four Million only

Rs. 4,000,000.00

SAMPATH BANK PLC

Authorised Signatory    Authorised Signatory

Sampath Bank PLC - Company No. PQ 144

⑈002668⑈ 7278⑆089⑆ 9004090000⑈

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
# முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1.1 பொது

கொள்கைகள் மாற்றமடையாத வகையில் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைய நிறுவனத்தின் நிதி நிலைமைகள் மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை யாவும் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

1 . 2 வெளிநாட்டு நாணயமாற்றங்களினது மாற்றம் எல்லா வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களும் குறித்த நேரத்தில் நிலவிய நாணயமாற்று வீதங்களுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன.

## 1.3 தயாரிப்பு அடிப்படைகள்

### 1.3.1 நிதிக்கூற்றுக்களின் இணக்கம்

நிதிக்கூற்றுக்களானவை நிதி நிலைமையைக் காட்டும் கூற்றுக்கள் நிதி அடைவுகளின் கூற்று, உரிமை மாற்றக்கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கி யிருந்தது. இக்கூற்றுக்களுக்கானவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின்படி தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.4 சொத்துக்களும், அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

### 1.4.1 கடன்பட்டோரும், ஏனைய வருமதிகளும்

வருமதிகள் எதிர்பார்க்கப்பட்ட தேறக்கூடிய பெறுமதிகளில் கொண்டு செல்லப் பட்டுள்ளன. வருட இறுதியில் குறித்த வெளிநின்ற பெறுமதிகளின் மீளாய்வு களின் மூலம் ஐயத்திற்கிடமான வருமதிகளின் மதிப்பீடுகள் செய்யப் பட்டுள்ளன.

### 1.4.2 சொத்துக்கள், இயந்திர சாதனங்களின் தேய்வு

சொத்துக்கள் கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அல்லது மீள்மதிப்பிடப் பட்ட பெறுமதிகளிலிருந்து திரண்ட பெறுமானத் தேய்வுகள் கழிக்கப்பட்டுச் சொத்து இணைப்புக்களின் போதான சேர்த்துக் கொள்ளப்படத்தக்க செலவீனங்கள் சொத்துக்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. சொத்துக்களின் தேய்வானது குறைத்தெழுதப்பட்ட பெறுமதியில் கீழ்வரும் வருடாந்த வீதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அலுவலக தளபாடமும் உபகரணமும் | 10% |
| கணினி உபகரணங்கள் | $33\frac{1}{3}\%$ |
| நூலக புத்தகங்களும், பருவகாலச் சஞ்சிகைகளும் | 10% |
| மோட்டார் சைக்கிள்களும், சைக்கிள்களும் | 20% |
| பொறித்தொகுதியும், இயந்திர சாதனங்களும் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கட்டிடங்கள் | 5% |
| பிரதியெடுக்கும் இயந்திரங்கள் | 10% |

**1.4.3 இருப்புகள்**

இருப்புகள் தேறிய தேறக்கூடிய பெறுமதியின் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்பட்டன.

**1.4.4 காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளாகக் கருதப்படுபவைகள் கையிலுள்ள காசும், வங்கியிலுள்ள காசும் மற்றும் வங்கியில் உள்ள நடைமுறைக் கணக்கு மீதிகளுமாகும்.

**1.4.5 காசுப் பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றானது நேரில் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**1.5 கணக்கீட்டு கொடைகள்**

கொடைகள் என்பவை நிறுவனத்தின் செலவினங்களை ஈடுசெய்வதற்கான கொடை களாகவும், வருமானமாகப் பெறப்பட்டவையையும் உள்ளடக்கும். இவை முறையான அடிப்படையில் வருமானக் கூற்றில் வருமானமாகவோ, செலவினம் ஒன்றாகவோ அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவை முறையான அடிப்படையில் வருமானக் கூற்றில் வருமானமாகவோ அல்லது செலவினங்கள் ஈடுசெய்யப்பட்ட அதே காலப் பகுதியில் செலவினம் ஒன்றாகவோ அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நிறுவனத்தின் செலவினங்களை ஈடுசெய்வதற்காக அதேசொத்தின் பெறுமதியான கொடைகள் மூலதனமாகக் கொள்ளப்படுவதுடன் குறிப்பிட்ட சொத்தின் ஆயுட் காலத்தின் முறையான அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்ட வருமானமாகவும் கொள்ளப்படும்.

**1.6 ஊழியர் நலன்கள்**

1.6.1 நிறுவனத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வு பணிக்கொடை தொடர்பாக 1983 ஆம் ஆண்டு 12ஆம் இலக்கச் சட்டத்தின்படி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொறுப்புத் தொடர்பில் வெளியக நிதியிடலோ மதிப்பீடுகளோ மேற்கொள்ளப்படவில்லை.

### 1.6.2 பங்களிப்புத்திட்டங்களின் வரையறை

ஊழியர் சேமலாபநிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குமான பங்களிப்பு பொறுப்புகள் வருமானக்கூற்றில் ஓர் எழுந்த செலவீனமாக இனங்காணப்பட்டுள்ளன.

## 1.7 நடைமுறைப் பொறுப்புகள்

ஐந்தொகைத் திகதியில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் அல்லது ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டியவை நடைமுறைப் பொறுப்புக்களாகும். நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் அல்லது ஐந்தொகைக்குப் பிந்திய தினமொன்றில் செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

## 1.8 ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்

முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள் கருத்தில் எடுக்கப்பட்டுப் பொருத்தமான முறையில் சீராக்கத்திற்கு உட்படும். அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் காட்டப்படுவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 1.9 வருமானம் மற்றும் செலவு

### 1.9.1 வருமானத்தை அடையாளப்படுத்தல்

(i) மீணடெழும் செலவினங்களுக்கான அரச கொடைகள் காசு அடிப்படையில் வருமான செலவினக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

(ii) பரீட்சைகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்வி மற்றும் அங்கத்தவர் செயற்பாடுகள் மிகை / பற்றாக்குறைகள் அவை நிகழ்ந்த ஆண்டின் நிறைவில் வருமானக் கணக்கில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

### 1.9.2 செலவினங்கள்

(i) வருடத்தில் வினைத்திறனான முறையில் நிறுவகத்தை நடாத்திச் செல்வதற்கு மூலதனச் சொத்துக்களைப் பேணிக் கொள்வதற்குமான எல்லாச் செலவீனங்களுக்கும் அவை வருமானத்திற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்டு மிகை / (குறை) பெறப்பட்டுள்ளன.

(ii) நிறுவனத்தின் வருமான இயலளவை அதிகரிப்பதற்காகவோ அசையாச் சொத்துக்களை விருத்தி செய்வதற்காகவோ இணைத்துக் கொள்வதற் காகவோ விரிவுபடுத்துவதற்காகவோ எழும் எல்லாச் செலவினங்களும் மூலதனச் செலவினங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

**2.0 நிகழத்தக்கவைகள்**

எதேச்சையாகக் கொடுக்க வேண்டிய கடன் / பொறுப்பு

**2.1** கீழ்வரும் வழக்குகள் நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்படாமலிருப்பதாலும் பெறுமதிகள் நிச்சயமற்றதாக இருப்பதினாலும் பொறுப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.
(i) எம். எச் 33 / 1005 / 11 - திருமதி. டப்ளியூ. ஏ. சீ. என். விக்கிரமசிங்க.

**2.2 நிலையற்ற சொத்துக்கள்**
கீழ்க்காட்டப்பட்டுள்ள சட்டரீதியான வழக்குகளின் முடிவுகள் நிலையற்ற சொத்துக் களின் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டவை யாகும்.

| | | |
|---|---|---|
| 1. | இல : 780/ 09 / எம் / நிதி | ரூபா. 2,237,337 |
| 2. | இல : 480/ 05 / நிதி | ரூபா. 2,947,755 |
| 3. | திருமதி, ஏ. பி. எஸ். எஸ். பதிரண | ரூபா. 4,056,527 |
| 4. | திருமதி. கே. டப்ளியு. பீ. ஏ. வீரவர்த்தன | ரூபா. 198,497 |
| 5. | செல்வி. பி. கே. விஜேகுணவர்த்தன | ரூபா. 1,335,286 |

**2.4** ரூ 202 189.60 பெறுமதியான சொத்துக்கள் மெய்மையாக்கங்களின் போது குறைவாகக் காணப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

## தேசிய கல்வி நிறுவகம்
## 31 மார்ச் 2016 இல் உள்ளவாறான
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்புக்கள் | 2016<br>ரூ. ச. | 2015<br>ரூ. ச. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும், காசுக்குச் சமமானவைகளும் | 1 | 320,852,665 67 | 316,977,765 46 |
| குறுகிய கால முதலீடுகள் | 2 | 384,007,069 95 | 321,948,287 31 |
| வியாபாரப் பெறுவனவுகளும் ஏனைய முற்பணங்களும் | 3,4 | 77,542,82 90 | 76,161,196 03 |
| இருப்பு / கையிருப்புக்கள் | 5 | 30,083,566 38 | 30,083,566 38 |
| முற்பணங்கள் | 6 | 48,120 00 | 122,508 00 |
| | | 860,699,909 39 | 745,293,323 18 |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| பெற்றுக் கொண்டவை | 7 | 160,643.39 | 335,890.55 |
| முடிவுறா வேலை | 8 | 477692450 | 1,200,949.33 |
| உட்கட்டமைப்பு, இயந்திரம், சாதனங்கள், நிலமும் கட்டிடங்களும் | 9 | 771,595,856 50 | 779,055,300 04 |
| | | 776,533,434 39 | 780,592,139 92 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,637,233,343 78 | 1,525,885,463 10 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு செலவுகள் | 10 | 130,409,358 98 | 74,970,040 06 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறி முற்பணஙகள் | 11 | 49,977,626 07 | 62,941,477 62 |
| | | 180,386,985 05 | 137,911,517 68 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 12 | 335,890 55 | 511,137 71 |
| பணிகொடைக்கான ஏற்பாடு | 13 | 118,419,977 65 | 102,838,149 37 |
| தேறிய சொத்துக்கள் | | 299,142,853 25 | 241,260,804 76 |
| | | 1,338,090,490 53 | 1,284,624,658 34 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமை** | | | |
| மூலதன ஒதுக்கமும் கொடைகளும் | 14 | 1,082,304,864 83 | 1,069,018,530 60 |
| திரட்டு நிதியம் | 15 | (43,823,665 53) | (81,616,424 64) |
| கடன் நிதியம் | 16 | 67,734,281 98 | 65,347,543.13 |
| ஒதுக்க நிதியம் | 17 | 231,875,009 25 | 231,879,009 25 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் / உரிமை | | 1,338,090,490 53 | 1,284,624,658 34 |

பக்கம் 3 முதல் பக்கம் 5 வரையான நிதிக் கூற்று அறிக்கைகளில் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் அவற்றின் உள்ளார்ந்த அத்தியாவசிய பகுதியை உருவாக்குகின்றன.

சரியென உறுதிப்படுத்தப்படுகிறது

..................................................................

**பீ. தேனபது**

பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி, நிர்வாகம், துணைச்சேவைகள்)

இவ்வகையான நிதிக்கூற்று அறிக்கைகளை உருவாக்குவதிலும் பேரவை சார்பாகக் கையெழுத்திடுவதிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவையே பொறுப்பு வகிக்கின்றது.

.....................................................

**கலாநிதி. ரி. ஏ. ஆர். ஜே. குணசேகர**

பணிப்பாளர் நாயகம்

9 பங்குனி 2017

.................................................

**எஸ். சுனில் ஹெட்டியாராச்சி**

பேரவைத் தலைவர்

செயலாளர், கல்வி அமைச்சு

**தேசிய கல்வி நிறுவகம்**
**31 மார்கழி 2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2016 | 2015 | வரவு செலவுத்திட்டத்திற்குபட்டது 2016 |
|---|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | | |
| வருமானம் | 18(20-25) | 483,095,240.55 | 469,432,730.60 | 156,431,000.00 |
| மீண்டெழும் அரச வெளி நாட்டுக் கொடைகள் | 19 | 313,226,000.00 | 341,723,342.44 | 568,526,000.00 |
| மொத்த வருமானம் | | 796,321,240.55 | 811,156,073.04 | 724,957,000.00 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | | |
| தனிப்பட்ட ஊதியம் | 26 | 330,648,046.79 | 292,034,774.92 | 316,698,000.00 |
| போக்குவரத்துச் செலவுகள் | 28 | 15,510,032.20 | 5,420,626.46 | 17,775,000.00 |
| வழங்குகையும் நுகரத் தக்கவையின் பாவனையும் | 29 | 19,852,044.19 | 34,772,354.07 | 99,543,000.00 |
| பெறுமானத் தேய்வும், தீர்ப்பான செலவும் | 30 | 54,915,047.11 | 50,755,415.38 | 0.00 |
| பேணுகை/ பராமரிப்பு | 31 | 30,566,846.44 | 26,572,014.52 | 13,040,000.00 |
| ஒப்பந்தச் செலவுகள் | 32 | 264,195,493.99 | 194,247,256.11 | 254,893,000.00 |
| வைப்புச் செலவுகள் | 33 | 15,344,104.00 | 28,567,170.37 | 0.00 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | 34 | 27,100,592.19 | 20,688,609.22 | 23,008,000.00 |
| நிதிச் செலவுகள் | 35 | 396,274.33 | 466,702.08 | 0.00 |
| மொத்தத் தொழிற்பாட்டுச் செலவு | | 758,528,481.44 | 653,524,923.13 | 724,957,000.00 |
| குறித்த வருடத்திற்கான மிகை / (பற்றாக்குறை) | | 37,795,759.11 | 157,621,149.91 | 0.00 |

பக்கம் 3 முதல் பக்கம் 5 வரையான நிதிக் கூற்று அறிக்கைகளில் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் அவற்றின் உள்ளார்ந்த அத்தியாவசிய பகுதியை உருவாக்குகின்றன.

அனுமதிக்கப்பட்டது

.............................................

**கலாநிதி. ரி. ஏ. ஆர். ஜே. குணசேகர**
பணிப்பாளர் நாயகம்

.....................................................

**பீ. தேனபது**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
(நிதி, நிர்வாகம், துணைச்சேவைகள்)
9 பங்குனி 2017
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# தேசிய கல்வி நிறுவகம்
## உரிமை மாற்றக் கூற்று –2016

| | கடன் நிதியம் ரூபா | மீள்மதிப்பீடு மற்றும் ஏனைய ஒதுக்கங்கள் ரூபா | மூலதன ஒதுக்கங்கள் ரூபா | திரண்ட நட்டங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| தை மாதம் 1 ஆம் திகதி 2015 ம் ஆண்டில் மீதி | 62,944,248 | 231,875.009 | 1,006,050,770 | (239,243,575) | 1,061,622,453 |
| நிலையான சொத்து வருமானம் | NIL | NIL | NIL | NIL | - |
| மூலதன ஒதுக்க வைப்பு | NIL | NIL | NIL | NIL | NIL |
| மூலதன நன்கொடைகள் | NIL | NIL | 87,900,000 | NIL | 87,900,000 |
| மூலதனக் கொடைகள் (வெளிநாட்டு உதவி) | NIL | NIL | 12,481,580 | NIL | 12,481,580 |
| பிரித்து வைக்கப்பட்ட மூலதன ஒதுக்கம் | NIL | NIL | NIL | NIL | - |
| கடன் நிதியத்திற்கான மாற்றம் | NIL | NIL | NIL | NIL | - |
| முந்திய கால சீராக்கம் | NIL | NIL | NIL | NIL | - |
| அனர்த்தக் கடனுக்கான வட்டி | 2,403,295 | NIL | NIL | NIL | 2,403,295 |
| கடன் நிதியம் | NIL | NIL | NIL | NIL | - |
| குறித்த ஆண்டிற்கான மிகை | NIL | NIL | NIL | 157,631,150 | 157,631,150 |
| நன்கொடைகள் | NIL | NIL | (1,095,107) | NIL | (1,095,107) |
| திறைசேரிக்கான கொடைகளும் ஏனையவையும் | NIL | NIL | 12,070,602 | NIL | 12,070,602 |
| மீள் மதிப்பீட்டு மிகையும் ஏனைய ஒதுக்கங்களும் | NIL | NIL | NIL | NIL | - |
| ஆய்வு அபிவிருத்திக்கான ஒதுக்கம் | NIL | NIL | NIL | NIL | - |
| பழைமையான இருப்பு | NIL | NIL | NIL | NIL | - |
| பெறுமானத் தேய்வு (பிற்போடப்பட்ட) | NIL | NIL | 48,389,314 | NIL | 48,389,314 |
| மிகையாகக் கணக்கிடப்பட்டவை | NIL | NIL | NIL | NIL | - |
| மூலதனத்திற்கான ஏற்பாடு | NIL | NIL | NIL | NIL | - |
| ஆய்வு அபிவிருத்திக்கான ஏற்பாடு | NIL | NIL | NIL | NIL | - |
| 31 மார்கழி 2015 இல் மீதி | 65,347,543 | 231,875.009 | 1,069,018,531 | (81,616,425) | 1,284,624,658 |
| 1 தை 2016 இல் மீதி | 65,347,543 | 231,875.009 | 1,069,018,531 | (81,616,425) | 1,284,624,658 |
| நிலையான சொத்து வருமான ஒதுக்கம் | NIL | NIL | NIL | NIL | - |
| மூலதன ஒதுக்க வைப்பு | NIL | NIL | NIL | NIL | - |
| மூலதனக் கொடைகள் | NIL | NIL | 21,000,000 | NIL | 21,000,000 |
| மூலதனக் கொடைகள் (வெளிநாட்டு உதவி) | NIL | NIL | 43,438,912 | NIL | 43,438,912 |
| பிரித்து வைக்கப்பட்ட மூலதன ஒதுக்கம் | NIL | NIL | NIL | NIL | - |
| கடன் நிதியத்திற்கு மாற்றப்பட்டது | NIL | NIL | NIL | NIL | - |
| முந்திய வருட சீராக்கம் | NIL | NIL | NIL | NIL | - |
| அனர்த்தக் கடன் வட்டி | 2,386,739 | NIL | NIL | NIL | 2,386,739 |
| கடன் நிதியம் | NIL | NIL | NIL | NIL | - |
| வருடத்திற்கான மிகை | NIL | NIL | NIL | 37,792,759 | 37,792,759 |
| நன்கொடைகள் | NIL | NIL | (733,588) | NIL | (733,588) |
| திறைசேரிக்கான கொடைகளும் ஏனையவையும் | NIL | NIL | 2,876,305 | NIL | 2,876,305 |
| மீள்மதிப்பீட்டு மிகையும் ஏனைய ஒதுக்கங்களும் | NIL | NIL | NIL | NIL | - |
| ஆய்வு அபிவிருத்திக்கான ஏற்பாடு | NIL | NIL | NIL | NIL | - |
| பழைமையான இருப்பு | NIL | NIL | NIL | NIL | - |
| பெறுமானத் தேய்வு (பிற்போடப்பட்ட) | NIL | NIL | 53,295,325 | NIL | 53,295,325 |
| மிகையாகக் கணக்கிடப்பட்டவை | NIL | NIL | NIL | NIL | - |
| மூலதனத்திற்கான ஏற்பாடு | NIL | NIL | NIL | NIL | - |
| ஆய்வு அபிவிருத்திக்காக ஏற்பாடு | NIL | NIL | NIL | NIL | - |
| 31 மார்கழி 2016 இல் மீதி | 67,734,282 | 231,875.009 | 1,082,304,865 | (43,823,666) | 1,338,090,490 |

## காசுப் பாய்ச்சல் கூற்று
## 31 மார்கழி 2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | 2016<br>ரூ. ச. | 2015<br>ரூ. ச. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல்** | | |
| சாதாரண நடவடிக்கைகளிலான மிகை / (பற்றாக்குறை) | 37,792,759 | 157,631,150 |
| **காசற்ற அசைவுகளுக்கான சீராக்கம்** | | |
| பெறுமானத் தேய்வு | 54,915,047 | 50,755,415 |
| பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு | 21,279,142 | 8,789,598 |
| **சீராக்கங்கள்** | | |
| அட்டுறு செலவுகளுக்கான சீராக்கல்கள் | | 209,715 |
| **தொழில்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகள்** | 113,986,948 | 217,385,878 |
| இருப்பு (அதிகரிப்பு) / குறைவு | (48,165,658) | 42,420,666 |
| பெறப்பட வேண்டியவைகள் (அதிகரிப்பு) / குறைவு | (1,381,633) | (3,153,469) |
| ஏனைய நடப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு/ குறைவு | 74,388 | 67,734 |
| கொடுக்கப்பட வேண்டியவைகளின் (அதிகரிப்பு) / குறைவு | 35,323,498 | (42,601,524) |
| | (14,149,405) | (3,266,593) |
| **தொழிற்படு மூலதனங்களின் தேறிய காசுப் பாய்ச்சல்** | | |
| தொழில்பாடுகளிலான காசு உருவாக்கம் | 99,837,543 | 214,119,285 |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய நலக் கிரயம் | (5,697,314) | (4,100,422) |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு உருவாக்கம் | 94,140,229 | 210,018,863 |
| **முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல்** | | |
| நடைபெறும் வேலை | 3,575,985 | |
| இயந்திர சாதனங்களின் சேர்ப்பு | (47,455,604) | (49,752,380) |
| திறைசேரி உண்டியல்களிலான முதலீடு | (62,058,783) | (30,514,656) |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்கான பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (105,938,402) | (80,276,035) |
| **நிதிச் செயற்பாடுகளிலான காசுப் பாய்ச்சல்** | | |
| மூலதனக் கொடைகளும் நன்கொடைகளும் | 13,286,334 | 55,067,760 |
| கடன் நிதியம் | 2,386,739 | 2,403,295 |
| **நிதிச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறியகாசு** | 15,673,073 | 57,471,055 |
| **காசும்/ காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | 3,874,901 | 187,222,882 |
| ஆண்டு தொடக்கத்தின் போதான காசும் காசுக்குச் சமமானவைகளும் | 316,977,765 | 129,754,883 |
| ஆண்டின் முடிவின் போதான காசும் காசுக்குச் சமமானவைகளும் | 320,852,666 | 316,977,765 |